வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 23.10.2023 திங்கட்கிழமை | இதழ் : 317 | பக்கங்கள் : 12

# அனைத்து மதங்களும் சமம் சகலருக்கும் சம உரிமைகள்

## இதுவே அரசாங்கத்தின் கொள்கை மன்னாரில் ஜனாதிபதி தெரிவிப்பு

மன்னார், ஒக்ரோபர் 23

**அனைத்து மதங்களையும் சமமாக நடத்துவதே எங்கள் கொள்கை. அனைவருக்கும் சம உரிமை வழங்குவதே எங்கள் நோக்கம் என்று நேற்று மன்னார் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



அத்துடன், இஸ்ரேல் - ஹமாஸ் மோதலில் பலஸ்தீன மக்களை பலிக்கடா ஆக்குவதை ஏற்றுக் கொள்ளவில்லை அங்கு, மோதல்களை தடுத்து அமைதியை நிலைநாட்ட ஐ. நா. பொதுச் செயலாளரின் வேலைத் திட்டத்துக்கு முழு ஆதரவு வழங்குவோம் என்றும் ஜனாதிபதி கூறினார்.

தேசிய மீலாதுன் நபி நிகழ்வு நேற்று மன்னார் முசலி தேசிய பாடசாலை விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்துக்கு அபிவிருத்தி தேவை. இந்தப் பகுதி போரால் பாதிக்கப்பட்ட பகுதி. எனவே, இந்தப் பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றுவதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றோம். குறிப்பாக, மன்னார் மாவட்டத்தில் வீதிகள் அமைப்பது தொடர்பில் தொடர்ந்தும் கலந்துரையாடி வருகின்றோம். குறிப்பாக, இப்பிரதேசத்தில் 11

## உறுதியான பட்ஜெட்டையே ஐ. எம். எவ். எதிர்பார்க்கிறது

கொழும்பு, ஒக். 23

உறுதியான வரவு - செலவு திட்டம் மற்றும் குறைந்த அளவிலான வரவு - செலவு திட்ட பற்றாக்குறை ஆகிய வற்றையே இலங்கையிடம் சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்நிலைச் சந்திப்பு அண்மையில் வாஷிங்டனில் நடைபெற்றது. இதனை மேற்கோள் காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி சேவை இவ்வாறு தெரிவித்துள்ளது.

இலங்கையின் வரவு - செலவு திட்டம் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த வரவு - செலவு திட்டத்தின் பற்றாக்குறை 15 சதவீதமாகக் 11

## சுகாதார பரிசோதகர்கள் இன்று வேலை நிறுத்தம்!

கொழும்பு, ஒக். 23

கோரிக்கைகளை முன்வைத்து பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் இன்று திங்கட்கிழமை அடையாள பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

பொது சுகாதார பரிசோதகர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்னைகளுக்கு சாதகமான தீர்வுகள் வழங்கப்படாமை தொடர்பில் 11

## வாழ்க்கை செலவு உயர்வால் பொதுமக்கள் பெரும் பாதிப்பு

### ஆளும் கட்சியின் தலைவர் மகிந்த

கொழும்பு, ஒக். 23

மக்கள் பொருளாதார பாதிப்பு, வாழ்க்கை செலவு உயர்வு ஆகிய நெருக்கடிகளால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்நிலைமை மாற்றியமைக்கப்படவேண்டும். ஜனாதிபதியுடன் எதிர்வரும் வாரம் நடைபெறவுள்ள பேச்சின்போது விசேட கவனம் செலுத்துவோம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொருளாதார பாதிப்பு மற்றும், வாழ்க்கை செலவு அதிகரிப்பால் ஒட்டுமொத்த மக்களும் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த நிலை, மாற்றியமைக்கப்படவேண்டும். 2024 ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டம் மக்களுக்கு பயனுடையதாக அமைய வேண்டும்.

மக்கள் எதிர்கொண்டுள்ள இந்த அவல 11

## முறை தவறும் எம். பிக்கள் மீது ஒழுக்காற்று!

கொழும்பு, ஒக். 23

பாராளுமன்றத்தில் முறையாக நடந்து கொள்ளாத உறுப்பினர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் வழங்கும் வரைவு அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் சபாநாயகர் கரு 11

# 2024 ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக தமிழர்!

## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி

யாழ்ப்பாணம், ஒக். 23

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகளின் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்த ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி கொள்கையளவில் இணக்கம் கண்டுள்ளது. அடுத்து வரும் நாட்களில் மாவை. சேனாதிராஜா தலைமையிலான இலங்கைத் தமிழரசு கட்சி மற்றும் சி. வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி ஆகியவற்றுடன் பேச்சுகளை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அந்தக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிறேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டுக்கு பின்னரான காலத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல்களில் தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றுக்கொடுக்கும் முகமாக தமிழ்க் கட்சிகள் முறையே சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு ஆதரவு தெரிவித்து செயல்பட்டிருந்தன. இதில் இரண்டு வேட்பாளர்கள் வெற்றியடைந்திருக்கவில்லை. மைத்திரிபால சிறிசேன மட்டுமே வெற்றி பெற்றிருந்தார். ஆனால், தமிழ் 11

## தனியார் வாகன இறக்குமதிக்கு தற்போது அனுமதி வழங்கப்படாது

### நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஒக். 23

தனியார் வாகனங்கள் இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளிக்கும் சாத்தியங்கள் தற்போதைக்கு கிடையாது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அந்நிய செலாவணி தட்டுப்பாடு காரணமாக வாகன இறக்குமதிக்கு அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதித்திருந்தது.

எவ்வாறெனினும், தனியார் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து இறக்குமதி கட்டுப்பாடுகளும் அண்மையில் தளர்த்தப்பட்டுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

உள்நாட்டில் போதியளவு வாகனங்கள் காணப்படுவதாக துறைசார் நிபுணர்கள் பரிந்துரை செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். 11

# நிகழ்நிலை, பயங்கரவாத எதிர்ப்பு சட்டங்களை மீளப்பெறவேண்டும்!

## 37 சிவில் அமைப்புகள், 125 மனித உரிமை செயல்பாட்டாளர்கள் கூட்டாக கோரிக்கை

கொழும்பு, ஒக். 23

நாட்டின் ஜனநாயகத்துக்கும் அடிப்படை உரிமைகளுக்கும் தீவிர அச்சுறுத்தலை தோற்றுவித்துள்ள நிகழ்நிலை காப்பு சட்டமூலம், பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் என்பன சர்வாதிகார போக்கிலான நிறைவேற்றதிகாரத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற நிரந்தர "அவசரகால நிலையை" கொண்ட நாடாக இலங்கை மாறுவதற்கு வழிவகுக்கும். எனவே, இந்த இரு சட்டமூலங்களும் அரசாங்கத்தால் உடனடியாக மீளப்பெறப் படவேண்டும் என 37 சிவில் சமூக அமைப்புகளும், மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் 125 பேரும் கூட்டாக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நிகழ்நிலை காப்பு சட்டமூலம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஆகிய இரண்டும் அரசாங்கத்தால் கடந்த 3ஆம் திகதி பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த இரு சட்டமூலங்களும் மிகமோசமான சரத்துகளை உள்ளடக்கியிருக்கின்றன. அவை கருத்து 11

# இப்படியும் நடக்கிறது

இலங்கைக்கு கடன் வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் பதினாறு நிபந்தனைகளை விதித்திப்பது தெரிந்ததுதான். அந்த பதினாறு நிபந்தனைகளில் ஒன்று:

'இங்கையின் நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு ஒதுக்கப்படுகின்ற வளங்களையும் இருக்கின்ற திறன்களையும் விஸ்தரிப்பதற்கு திட்டம் ஒன்றை உருவாக்கி அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். அதனூடாக இந்த ஆணைக்குழு தமது கடமை - பொறுப்புகளை சுயாதீனமாக மேற்கொள்வதற்கான இயலுமை மற்றும் ஆற்றலை மேம்படுத்த முடியும். அத்துடன், நீதித் துறைக் கட்டமைப்பில் அல்லது செயன்முறையில் மாற்றங்களைக் கொண்டுவரவும் நீதித்துறையை அபிவிருத்தி செய்யவும் நீதித்துறை ஏனைய துறைகள் மீது கண்காணிப்பு, மேற்பார்வை என்பவற்றை சுயாதீனமாக மேற்கொள்வதற்கு இந்த ஆணைக் குழுவுக்கு போதிய வளங்களும் தகுதி மற்றும் திறமைக்கொண்ட ஆளணியினரும் நியமிக்கப்பட வேண்டும்' என்கிறது.

அதாவது நீதிச் சேவையில் அரசியல் செல்வாக்கு செலுத்துவதை தடுக்கவேண்டும் என்பதே அதன் முக்கிய நோக்கம். இந்த நிபந்தனையை இலங்கை எவ்வளவுதூரம் அமுல்படுத்தும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இந்த நிலையில்தான் ஒரு நீதிபதி தான் வழங்கிய தீர்ப்பின் காரணமாக தனக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறிக்கொண்டு நாட்டைவிட்டு வெளியேறியிருக்கிறார். ஆனால் அதே வேளை, எதிர்க்கட்சியிலிருந்து அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சரவையிலும் இடம்பிடித்திருந்த ஓர் அமைச்சர் கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உள்ளாகி கட்சியிலிருந்து வெளியேற்றியது சரியானது என்று உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் பிரகாரம் பதவியிழந்திருக்கிறார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து தெரிவாகி, பாராளுமன்ற உறுப்பினரான ஹாபீஸ் நஷீர் அஹமட், கோட்டாபய அரசில் கொண்டுவரப்பட்ட இருபதாவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்து அரசுடன் இணைந்திருந்தார். இதனையடுத்து அவர் கட்சிக் கட்டுப்பாட்டை மீறினார் என்று கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டமையைத் தொடர்ந்து கட்சியின் அந்த முடிவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கிலேயே கட்சியின் முடிவுக்கு ஆதரவாக உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. அதனையடுத்து அவர் பதவி இழந்தது பழைய சங்கதிதான். ஆனாலும், அது எதனைக் காட்டுகின்றது என்றால் எமது நீதிமன்றங்களின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த வழக்கில் முன்னிலையான தமிழரசின் எம். பி. சுமந்திரன், ஒரு தடவை பாராளுமன்றில் கூறியிருந்தது பலருக்கும் ஞாபகமிருக்கலாம். அதாவது தான் ஒரு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்கின்றபோதே அந்த வழக்கில் யார் நீதிபதி என்பதை பார்த்தே வழக்கை தாக்கல் செய்வதாக. அப்படி உயர்நீதிமன்றில் நீதிபதி யார் என்பதை பார்த்து வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்பதால், அவர் இந்த வழக்கிலும் அப்படித்தான் ஆஜராகியிருப்பார் என்று கூற முடியாது.

அதுவல்ல, இன்று நாம் சொல்ல வருவது: அதேபோன்ற ஒரு வழக்கு ஒன்றல்ல இரண்டு பேருக்கு எதிரான வழக்கும் தற்போது நீதிமன்ற விசாரணையில் இருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து வெளியேறி அரசுடன் இணைந்து அமைச்சர்களாக செயல்பட்டு வரும் ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு எதிரான ஐக்கிய மக்கள் சக்தியின் முடிவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளே அவை.

முஸ்லிம் காங்கிரஸின் நஷீர் தொடர்பான வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பைப் போலவே அவர்கள் மீதான வழக்கிலும் தீர்ப்பு வழங்கப்படும் என்றே பரவலாக நம்பப்படுகின்றது.

ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையே பெரும் வேறுபாடு உண்டு என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி என்பது ஒரு காலத்தில் தற்போதைய இராஜாங்க அமைச்சர் டயானா கமகேக்கு சொந்தமான கட்சியாக இருந்தது. சஜித் பிரேமதாஸ ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறிய பின்னர் இந்தக் கட்சியையே ஐக்கிய மக்கள் சக்தி என்ற பெயரில் நடத்தி வருவதுடன், அதற்காகவே டயானா கமகே அக்கட்சியின் தேசியப் பட்டியல் எம். பியாகவும் நியமிக்கப்பட்டிருந்தார். அதனால்தானே என்னவோ அவர் கோட்டாபய பதவிக் காலத்திலேயே கட்சி மாறி அமைச்சரானபோதிலும் அவர் மீது கட்சி எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இப்போது ஹரின், மனுஷ ஆகியோர் மீது கட்சி கட்டுப்பாட்டை மீறினரென வெளியேற்றியிருந்தாலும், அந்தக் கட்சி முறையான ஒழுக்காற்றுக் குழுவை கொண்டிருக்கவில்லை என்றும் அதனால் அவர்களை வெளியேற்றியது செல்லாதது என்றும் அவர்கள் வாதிடுகின்றனர்.

ஆனாலும் அவர்கள் இருவரின் பதவியும் நீதிமன்றத்தின் மூலம் பறிக்கப்படுவது பெரும்பாலும் நம்பப்படுவதாலேயே அமைச்சரவை மாற்றம் குறித்து பேசப்பட்டு வருவதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹரீன் பெர்னாண்டோ ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து மீண்டும் தாய்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்திருந்தாலும் கட்சிக்குள் முக்கிய பதவி ஒன்றுக்காக முட்டிமோதிக் கொண்டிருந்தார் என்பதும் உள்ளக தகவல். இதனால் அவருக்கு எதிரான கட்சிக்காரர்கள் கொஞ்சம் சந்தோசத்தில் இருக்கின்றனராம்.

-ஊர்க்குருவி.

# மின்சார சபை நட்டத்தில் இயங்க ஊழலே காரணம்

## இராதாகிருஷ்ணன் எம். பி. சாடல்

கொழும்பு, ஒக். 23

மின்சார கட்டண அதிகரிப்பு நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் கொண்ட மக்களுக்கு மேலும் பெரும் சுமையாக அமைந்துள்ளதாகவும் முறையற்ற முகாமைத்துவமே மின்சார சபை நட்டத்துடன் இயங்குவதற்கு காரணம் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.



மின்சார கட்டண அதிகரிப்பு உள்ளிட்ட விடயங்கள் குறித்து வினவியபோது இவ்வாறு பதில் அளித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின்சார கட்டணம் மேலும் அதிகரிக்கப்பட்டமை வருமானம் குறைவாக உள்ள பெருந்தோட்ட மக்களை கடுமையாக பாதித்துள்ளது. நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் கொண்ட மக்களுக்கு கடும் சுமையை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே, தம்மிடம் இருந்த தங்க ஆபரணங்கள் போன்றவற்றை விற்றே இந்த மக்கள் மின்சார கட்டணம் போன்றவற்றை செலுத்தியுள்ளனர். இந்த சூழலிலும் கட்டணங்கள் மேலும் அதிகரிக்குமாக இருந்தால் மக்கள் எவ்வாறு வாழ முடியும்.

மின்சார சபை நட்டத்துடன் இயங்குவதே கட்டண அதிகரிப்புக்குக் காரணம் என சொல்லப்படுகிறது. முறையற்ற முகாமைத்துவமே மின்சார சபை நட்டத்துடன் இயங்குவதற்கு காரணமாகும். மின்சார சபையில் தேவைக்கு அதிகமான ஊழியர்கள் பணியாற்றுவதுடன் அவர்களின் கொடுப்பனவுகளுக்காக அதிகம் செலவிடப்படுகிறது. பெரும் கட்டத்துக்கு இவ்வாறன விடயங்களே காரணம் ஆகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கைகளுக்கு அமையவே தற்போது நாட்டில் தீர்மானம் எடுக்கப்படுகின்றது. இதனால் மக்களின் மீதே இறுதி சுமை சுமத்தப்படுகின்றது. நாட்டில் பல்வேறு ஊழல்கள் நடந்த போதும் அதற்கான நடவடிக்கைகள் இன்னமும் எடுக்கப்படவில்லை. துரதிர்ஷ்டவசமாக ஊழலால் ஏற்பட்ட பிரதிபலனை இறுதியில் மக்களே எதிர்கொள்கின்றனர் - என்றார்.

# திருநகரில் தொடர்ந்த அகழ்வு பணி நிறுத்தம்

கிளிநொச்சி, ஒக். 23

திருநகரில் புதையல் இருப்பதாகக் கூறி தொடர்ந்த அகழ்வு பணிகள் நேற்றுடன் இடைநிறுத்தப்பட்டன.

கிளிநொச்சி - திருநகர் பகுதியில் தனியார் காணி ஒன்றில் புதையல் இருப்பதாக்கூறி கடந்த 20ஆம் திகதி அகழ்வு பணிகள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற அனுமதியுடன் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டது.

17 அடி வரை அகழ்வு பணிகள் நடைபெற்ற நிலையில் நேற்றைய தினமும் அகழ்வு பணிகள் முடிவடைந்தது.

இந்த நிலையில், நேற்று அகழ்வு பணி இடம்பெற்ற இடத்தில் எந்த சான்று பொருட்களும் காணப்படாத காரணத்தால் கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் துபராகினி ஜெகநாதன் அகழ்வு பணியை நிறுத்துமாறு கூறியுள்ளார்.

(ஐ)

# வளிமண்டலவியல் திணைக்களம் கடற்றொழிலாளர்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, ஒக். 23

வளிமண்டலவியல் திணைக்களத்தின் இயற்கை அனர்த்தங்களுக்கான ஆரம்ப எச்சரிக்கை மையம் பலத்த காற்று மற்றும் கடல் சீற்றம் குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென்மேற்கு மற்றும் அதனை அண்டிய மேற்கு வளைகுடாவில் மீன்பிடி படகுகளை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மத்திய - மேற்கு வங்கக் கடலில் நிலைகொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவாகி அடுத்த 24 மணி நேரத்தில் வங்க கரையை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்போது காற்றானது 40-45 கி.மீ வேகத்தில் வீசுவதுடன், சில நேரங்களில் 50-60 கி.மீற்றர் வேகத்திலும் வீசக்கூடும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்படுள்ளது.

அத்துடன், கடல் கொந்தளிப்புடன் காணப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆகவே நீண்டதூர கடற்பயணங்களை மேற்கொள்ளும் மீனவர்கள் அவதானத்துடன் செயல்பட வேண்டும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# காட்டு யானைகள் குறித்து கணக்கெடுப்பு நடத்துங்கள்

## சூழலியலாளர் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 23

நாட்டில் காட்டு யானைகள் தொடர்பில் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என சூழலியலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காட்டு யானைகள் தொடர்பான ஆய்வாளரும் சூழலியலாளருமான ஜானக மங்கல இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

10 வருடங்களுக்கு மேலாக நாட்டில் காட்டு யானைகள் கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை. இறுதியாக 2011ஆம் ஆண்டளவிலேயே காட்டு யானைகள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டன.

இறுதி கணக்கெடுப்பின்படி நாட்டில் 5 ஆயிரம் காட்டு யானைகளே இருந்தன. வருடாந்தம் 400 காட்டு யானைகள் இறக்கின்றன என்று காட்டு யானைகள் தொடர்பான ஆய்வாளரும் சூழலியலாளருமான ஜானக மங்கல தெரிவித்தார். (ஐ)

# 5,000 அதிபர்களுக்கு விரைவில் நியமனம்!

கொழும்பு, ஒக். 23

5 ஆயிரம் அதிபர்களுக்கான நியமனக் கடிதங்கள் அடுத்த மாதம் கையளிக்கப்படவுள்ளன என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார் தெரிவித்துள்ளார்.

அதன்படி, அனைத்து தரங்களுக்குமான அதிபர்களுக்கான நியமனக் கடிதங்கள் இவ்வாறு கையளிக்கப்படவுள்ளன.

இதேவேளை, எதிர் வரும் வரவு - செலவுத் திட்டத்தில் ஆசிரியர்களின் சம்பளமும் அதிகரிக்கப்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ஈழநாடு
Eelanadu
23.10.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், ஐப்பசி 06

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# இரு தேசங்கள் - தீர்வின் தோல்வி

தற்போது இடம்பெற்றுவரும் இஸ்ரேல் - ஹமாஸ் (பலஸ்தீனியர்கள்) யுத்தம் - சர்வதேச அரசியல் அவதானிகள் மத்தியில் ஒரு விவாதத்தை தோற்றுவித்திருக்கின்றது. அதாவது, பலஸ்தீனியர்களின் பிரச்னைக்கான அரசியல் தீர்வாக இரண்டு அரசுகள் என்னும் அடிப்படையிலான தீர்வு கிட்டத்தட்ட இறந்துவிட்டது. இரண்டு அரசுகள் என்னும் அடிப்படையிலான அரசியல் தீர்வின் மூலம் பலஸ்தீனிய - இஸ்ரேல் பிரச்னையை அணுக முடியாது. ஏனெனில், ஹமாஸ் அமைப்பு கடந்த 7ஆம் திகதி திடீரென்று யூத மக்கள் மீது மேற்கொண்ட தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல் இதுவரையில் கடைப்பிடித்துவந்த அதன் பாதுகாப்பு கொள்கையை மாற்றியமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இந்த நிலையில் எதிர்காலத்தில் காஸா பகுதியை கண்காணிப்புக்குள் வைத்துக் கொள்வதற்கு ஏற்றவாறான பாதுகாப்பு கொள்கையை கைக்கொள்ளும் நோக்கிலேயே தற்போது அந்தப் பகுதியை நோக்கி தொடர் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது. தனது நாட்டுக்கு ஆபத்து வருகின்றபோது, அதனை தடுத்து, தன்னை பாதுகாத்துக் கொள்ளும் உரித்து இஸ்ரேலுக்கு உண்டு - என்னும் அடிப்படையிலேயே இந்த விடயம் மேற்கு உலகால் நோக்கப்படுகின்றது. ரஷ்ய ஜனாதிபதி புடினும் ஹமாஸ் அமைப்பும் அண்டை நாடுகளின் ஜனநாயகத்தை அழிக்கும் வேலையையே செய்துவருவதாக அமெ ரிக்க ஜனாதிபதி பைடன் தெரிவித்திருக்கின்றார்.

பலஸ்தீனுக்கான சுயநிர்ணய உரிமை ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நோர்வேயின் சமாதான முன்னெடுப்பின் கீழ் பிரச்னைக்கான தீர்வாக இடைக்கால அதிகார சபை நிறுவப்பட்டு இந்த அடிப்படையில் பலஸ்தீனியர்களுக்கான இடங்களில் சுயாட்சியை நிறுவதற்கான உரித்தையும் பலஸ்தீனர்கள் பெற்றனர். அந்த அடிப்படையில் தேர்தலும் நடைபெற்றது. கடந்த செப்ரெம்பர் மாதத்துடன் ஒஸ்லோ உடன்பாடு எட்டப்பட்டு, முப்பது வருடங்கள் முடிந்துவிட்டது. ஆனாலும், இஸ்ரேல் - பலஸ்தீன முரண்பாடு முடிவுக்கு வரவில்லை. அவ்வப்போது காஸா பகுதியை அடிப்படையாகக் கொண்டு முரண்பாடுகளும் மோதல்களும் ஏற்பட்டவாறே இருந்தன. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தற்போது, ஹமாஸ் யூத மக்களை இலக்கு வைத்து கொலை செய்திருக்கும் பின்னணியில் நிலைமைகள் தலைகீழாக விட்டன.

பலஸ்தீனத்துக்கான சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வு முயற்சி தோல்வியடைந்துவிட்டதாகவே பலரும் கருதுகின்றனர். இது நமது சூழலுக்கும் பொருத்தமானது. ஏனெனில், நமது சூழலிலும் ஒரு நாடு இரு தேசங்கள் என்னும் அடிப்படையிலான அரசியல் தீர்வு தொடர்பில் பேசிவருகின்றனர். அவ்வாறானதொரு தீர்வு ஒரு கனவுலகவாதம் என்பதைத்தான் தற்போதைய இஸ்ரேல் - ஹமாஸ் யுத்தம் நீரூபித்தி ருக்கின்றது. இத்தனைக்கும் பலஸ்தீனத்துக்கான சுயநிர்ணய உரிமை ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. பலஸ் தீனர்களுக்கென்று ஓர் அரசு இயங்கி வருகின்றது. இந்த நிலையில்கூட, பிரச்னையை தீர்க்க முடியவில்லை. அவ்வாறாயின் எந்தவோர் ஆதர வும் வழிவகைளும் இல்லாத ஈழத் தமிழ் சமூகம் - எவ்வாறு இரு தேசங்கள் என்னும் அடிப்படையில் தீர்வை அடைய முடியும்? இதன் காரணமாகத்தான் நாம் இருப்பதை உச்சபட்சமாக பயன்படுத்தும் உபாயங்கள் தொடர்பில் பேசி வருகின்றறோம். ஏனெனில், “பட்டு வேட்டிக்கு ஆசைப்பட்டு கட்டியிருக்கும் கோவணமும் பறந்த” கதை யாகிவிடக் கூடாது.

# போதைப் பொருளை ஒழிக்க மக்கள் தகவல் தரவேண்டும்!

## புதுக்குடியிருப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி

*முல்லைத்தீவு, ஒக். 23*

போதைப்பொருளை ஒழிக்க தகவல்களை தாருங்கள், இரகசியம் பேணப்படும் என புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹேரத் தெரிவித்தார்.

கிராமங்களிலுள்ள மக்களின் பிரச்னைகளை வெளிக்கொண்டுவரும் முகமாக ஜனசபா அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டு 19 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளன. நான் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்கு கடமைக்கு வந்து இரண்டு வருடங்கள் ஆகின் றன.

அதிகமாக கசிப்பு, போதைப்பொருளோடு தொடர்புடைய பிரதேசமாக புதுக்குடியிருப்பு, புதிய குடியிருப்பு கிராமமே இருக்கிறது. தினந்தோறும், வாரந்தோறும், மாதந்தோறும் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வழக்குத் தாக்கல்களை செய்து வருகின்றோம். அதற்கான சாட்சியங்கள் எங்களிடம் இருக்கின்றன.

பொலிஸ் என்ற அடிப்படையில் கசிப்பை நிறுத்துவதற்குரிய செயல்பாடுகள் எவை என்பது எங்களுக்கு தெரியும். பொதுச் சபையில் இவ்விடயத்தை பொதுமக்கள் கூறியமை எனக்கு சந்தோசமாக இருக்கின்றது.

கிராமத்தில் இருக்கக்கூடிய அதிகமானோர் பொலிஸில் முறைப்பாடோ அல்லது தகவல்களோ வழங்குவதில்லை. இருப்பினும் அவ்வாறான இடங்களுக்கு எமது அதிகாரிகளை அனுப்பி முடியுமான வரை நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். சிலர் தகவல்களை வழங்கினாலும் அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்டே சுற்றிவளைப்புகளை மேற்கொள்கின்றோம்.

இந்த செயல்பாடுகளுக்கு எல்லாம் இறுதியில் தீர்ப்பு வழங்கப்படுவது நீதிமன்றத்திலேயே. மனித உரிமைகள், சட்டங்கள், மக்களுடைய பாதுகாப்பு ஆகிய விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும். நீங்கள் தகவல்களை தாருங்கள். தற்போது கைது செய்யப்படுபவர்களை விட, இன்னும் அதிகமானோர் கைதாவார்கள்.

ஜனசபா செயல்குழுவை உருவாக்கியதன் காரணமே இவ்வாறான பிரச்னைகளை தீர்ப்பதற்கே ஆகும். ஆகவே, உங்கள் பிரச்னை களை எமக்கு அறியத் தாருங்கள். தகவல்கள் பாதுகாக்கப்படும் என மேலும் தெரிவித்தார். (ஐ)

# முல்லைத்தீவு விபத்தில் தந்தை பலி; மகன் படுகாயம்!

*முல்லைத்தீவு, ஒக். 23*

மோட்டார் சைக்கிளை பாரவூர்தி மோதிய விபத்தில் தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மகன் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 10 மணியளவில் ஏ-9 நெடுஞ்சாலை - செல்வபுரம் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் அதே இடத்தை சேர்ந்த கதிரவேலு லட்சுமணன் என்ற 3 பிள்ளைகளின் தந்தையே ஸ்தலத்தில் உயிரிழந்தார்.

தந்தையும் மகனும் மோட்டார் சைக்கிளில் கிளிநொச்சிக்கு சென்றுவிட்டு வீட்டுக்கு திரும்பிக் கொண்டிரு ந்தபோது அதே திசையில் பயணித்த பாரவூர்தி மோதி விபத்து ஏற்பட்டது.

பார ஊர்தியின் சாரதி தப்பி சென்றுள்ள நிலையில் அவரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# பெருந்தொகை கசிப்புடன் மயிலிட்டியில் ஒருவர் கைது

*யாழ்ப்பாணம், ஒக். 23*

120 லீற்றர் கசிப்புடனும் 800 லீற்றர் கோடாவுடனும் நபர் ஒருவர் மயிலிட்டியில் கைது செய்யப்பட்டார்.

காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்த கைது நடைபெற்றது.

மயிலிட்டி வடக்கு பகுதியை சேர்ந்த 37 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். இதன் போது கசிப்பு தயாரிக்க பயன்படுத்தப்படும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபரை விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். முயற்சிகளில் வெற்றி கிட்டும் நாள்.

**இடபம்**

குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். மாற்றம் உண்டாகும் நாள்.

**மிதுனம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**கடகம்**

மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். நன்மை கிட்டும் நாள்.

**சிம்மம்**

குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பளிப்பார்கள்.வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். அதிர்ஷ்டமான நாள்.

**கன்னி**

புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். திருப்தி உண்டாகும். மகிழ்ச்சியான நாள்.

**துலாம்**

எதிர்ப்புகள் அடங்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும்.நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும்.

**விருட்சிகம்**

குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**தனுசு**

கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். புதிய வாய்ப்புகள் தேடி வரும்.

**மகரம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். பணப்பற்றாக் குறையால் பிறரிடம் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**கும்பம்**

குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். யாரையும் பகைத்துக்கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். மேலதிகாரியுடன் மோதல்கள் வேண்டாமே. விழிப்புணர்வு தேவைப்படும்.

**மீனம்**

தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். வாகன வசதிப் பெருகும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். மதிப்புக் கூடும்.

# ஆரிய ஆதிக்கத்துக்கே நாம் எதிரி ஆன்மீகத்துக்கு எதிரானோரல்ல!

## தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின்

சென்னை, ஒக். 23

**நாங்கள் ஆரிய ஆதிக்கத்துக் குத்தான் எதிரியே தவிர, ஆன்மகத்துக்கு அல்ல என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

**நீட் பரீட்சையை இரத்து செய்யக்கோரி மாணவர்கள் முன்னெடுக்கும் கையெழுத்து போராட்டத்தில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

“தமிழினத்தை தலை நிமிர்த்துவதற்காக பிறந்த இயக்கம் தான் திராவிட இயக்கம். இப்போது ‘சீவிடுவேன் சீவிடுவேன்’ என சொல்கிறார்களே, அப்படி யாருடைய தலையையும் எடுக்க பிறந்த இயக்கமல்ல. சமூக வலைத்தளங்கள் ஒருவரை ஒரே நாளில் புகழின் உச்சிக்கு கொண்டு செல்லும். ஒருவர் பல காலம் கட்டமைத்த பிம்பத்தை சில நொடிகளில் உடைத்தும் விடும். எதிர்மறை பிரசாரத்தின் மூலம் எதிரியை வீழ்த்துவதைவிட, நேர்மறை பிரச்சாரத்தின் மூலம் நம்மை வளர்த்துக் கொள்வது தான் சரியானது.

இந்த இயக்கத்தை அழித்து விடலாம் என நினைத்தவர்களின் எண்ணம்தான் அழிந்துவிட்டது. தி. மு. கவை கற்பனையில் கூட அழிக்க முடியாது. திராவிட இயக்கத்தை ஒழிப்பதைத் தவிர வேறு வேலையில்லை எனக் கூறியவர்கள், இறுதியில் இங்கு தான் வந்து அடைக்கலம் அடைந்தார்கள்.

நாம் இன்று பா. ஜ. க., அ. தி. மு. க. போன்றவர்களுடன் மோதிக் கொண்டிருக்கிறோம். சாதி, மதத்தின் பெயரால் பிளவு படுத்தி நாட்டை நாசம் செய்ய நினைக்ககூடிய ஒரு கூட்டத்



துக்கு எதிராக மோதிக் கொண்டிருக்கிறோம். பா. ஜ. கவின் சாதித்தன்மை தமிழ்நாட்டுக்கு மட்டும் எதிரானது அல்ல. நமது இந்தியாவுக்கே எதிரானது, ஒட்டுமொத்த மனித குலத்துக்கு எதிரானது.

இப்படிப்பட்ட பாசிச வாசிகள் ஒருபக்கம். இவர்களின் பாதம் தாங்கிகளாக இருந்து தமிழ்நாட்டின் உரிமைகளை அடகு வைத்த அ. தி. மு. க. மறு பக்கம். கொள்கை என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கக்கூடிய கூட்டம்தான் அதிமுக. பா. ஜ. கவுடன் இருந்தால் தமிழக மக்களால் புறக்கணிக்கப்படும் என்று பயந்து உள்ளே வெளியே ஆட்டம் ஆடிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டை அழிக்க நினைக்கின்ற பா. ஜ. கவும், அண்ணா பெயரால் கட்சி நடத்தி, அதை பா. ஜ. கவிடம் அடகு வைத்த அதிமுகவும் வேறு வேறு அல்ல. நாணயம் இல்லாத நாணயத்தின் இரு பக்கங்கள்.

அரசியல்வாதிகளை தாண்டி ஊடகவியலாளர்கள், முற்போக்கு சிந்தனையாளர்களிடமும் அத்து மீறல், மிரட்டல், அடக்குமுறையை ஏவுகிறது பா. ஜ. க. இப்படிப்பட்ட சோஷியல் வைரஸைதான் நாம் துணிச்சலுடன் எதிர்த்து நிற்கிறோம்.

என் மனைவி துர்கா ஸ்டாலின் எந்த கோயிலுக்கு செல்கிறார் என்பதை பார்ப்பதுதான் பா. ஜ. கவினரின் ஒரே வேலையாக உள்ளது. அங்கே சென்று போட்டோ எடுத்துவிட்டு, இதோ பார்த்தீர்களா கோயிலுக்கு போகிறார் என பரப்புவார்கள். தமிழ்நாட்டில் இருக்கும் எல்லா கோயிலுக்கும்தான் என் மனைவி செல்கிறார். அது அவருடைய விருப்பம். அதை நான் தடுக்க விரும்பவில்லை. தடுக்கவும் தேவையில்லை. நாங்கள் ஆரிய ஆதிக்கத்துக்குத் தான் எதிரியே தவிர, ஆன்மிகத்திற்கு அல்ல - என்றார்.

(ஐ)

# பா. ஜ. க. தொண்டர்கள் சிந்திய இரத்தத்துக்கு பதில் கூறவேண்டும்!

## தமிழ்நாடு அரசுக்கு அண்ணாமலை எச்சரிக்கை



*சென்னை, ஒக். 22*

*தமிழக பா. ஜ. கவின் ஒரு கொடிக்கம்பத்தை அகற்றிவிட்டதால் வெற்றி பெற்றதாக நினைத்துக் கொள்ள வேண்டாம். 100 கொடிக் கம்பங்கள் நடுவோம் என தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தமிழக அரசை சாடியிருக்கிறார்.*

*சென்னையை அடுத்த பனையூரில் அண்ணாமலை வீட்டின் அருகே அமைக்கப்பட்டிருந்த கொடிக் கம்பத்தை, இரவோடு இரவாக பொலிஸார் அகற்றினர். இதையடுத்து, பா. ஜ. க. கொடிக்கம்பத்தை அகற்ற எதிர்ப்பு தெரிவித்த பா. ஜ. கவினரை பொலிஸார் கைது செய்தனர். இந்த நிலையில், திமுக அரசுக்கு தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து அவர் தன்னுடைய எக்ஸ் பக்கத்தில்,*

*“குண்டு வைத்து மக்கள் பலரைக் கொன்ற தீவிரவாதிகளை எல்லாம், அரசியலுக்காக விடுதலை செய்யத் துடிக்கும் தி. மு. க., தீவிரவாதிகள் காரில் வெடிகுண்டுகளோடு சுதந்திரமாகச் சுற்றித் திரியும் அளவுக்கு உளவுத்துறையில் கோட்டை விட்ட தி. மு. க., பனையூரில் கிளைத் தலைவர் ஏற்பாட்டில் நடப்பட்டிருந்த கொடிக் கம்பத்தை அகற்ற, தீவிரவாதிகளைக் கைது செய்யப்போவது போல நள்ளிரவில் பெரும் பொலிஸ் படையுடன் புறப்பட்டு வந்தது பெரும் விநோதம்.*

*தி. மு. க. அரசின் உத்தரவின் பேரில், நள்ளிரவில் கொடிக்கம்பத்தை அகற்ற வந்த காவல்துறையினரை எதிர்த்துப் போராடிய பா. ஜ. கவைச் சகோதர, சகோதரிகள் மீது, காட்டுமிராண்டித் தனமான தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். பொது மக்களை ஏய்த்துப் பிழைப்பை நடத்திக் கொண்டிருக்கும் திமுக, எங்கள் தொண்டர்கள் சிந்திய ஒவ்வொரு துளி ரத்தத்துக்கும் பெரும் விலை கொடுக்க வேண்டியிருக்கும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*அதிகாரத் திமிரில் அராஜகம் செய்து கொண்டிருக்கும் திமுக, தமிழக பா. ஜ. கவின் ஒரு கொடிக்கம்பத்தை அகற்றிவிட்டதால் வெற்றி பெற்றதாக நினைத்துக் கொள்ள வேண்டாம். நவம்பர் 1ஆம் திகதி தொடங்கி 100 நாட்களுக்கு ஒவ்வொரு நாளும் தமிழகம் முழுவதும் 100 பாஜக கொடிக் கம்பங்கள் நடப்படும் - என்றார்.*

*(ஐ)*

# விளையாட்டு செயலிகள் மூலம் பண மோசடிகள் நடக்கின்றன!

## மக்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்!

யாழ்ப்பாணம், ஒக். 23

**விளையாட்டு செயலிகள் (apps) ஊடாக பண மோசடிகள் நடக்கின்றன. இது தொடர்பில் மக்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும் என்றும் யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விஷாந்த தெரிவித்தார்.**

**இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,**

வடக்கு மாகாணத்திலும் யாழ்ப்பாண மாவட்டத்திலும் இவ்வாறான பண மோசடிகளில் சிக்கிக்கொண்ட பலர் உள்ளனர். குறிப்பிட்ட விளையாட்டு செயலிகளில் இணைந்துகொள்வோர் அங்கு ஒரு சிலரை கொண்ட குழுவாக்கப்படுகின்றனர். அதில் இணையும்போது ஒரு சிறு தொகைப் பணம் அவர்களின் கணக்குக்கு வழங்கப்பட்டு சேர்க்கப்படுகிறது. அந்த குழுவில் அதிகளவானோர் இருக்கின்றனர் என்று காட்டும்.

அதன் பின்னர் விளையாட்டின் ஒவ்வொரு படிநிலையின்போதும் ஒரு தொகைப் பணத்தை செலுத்த வேண்டும். அதில் சிறு தொகை உடனடியாகவே மீளவும் விளையோடுவோரின் கணக்கில் வரவு வைக்கப்படும். தொடக்கத்திலே விளையாடுபவர் முதலில் வெற்றி பெறுவார்.

அதனால், ஏற்படும் நம்பிக்கையால் மீண்டும் மீண்டும் பணம் செலுத்தி விளையாட தூண்டப்படுகின்றனர். விளையாட்டின் ஒவ்வொரு படிநிலையின்போதும் செலுத்த வேண்டிய தொகை அதிகரித்து செல்லும். இது இலட்சங்களை எட்டும்போதும் கணக்கில் சிறியளவு தொகை வரவு வைக்கப்படும். உதாரணமாக 40 இலட்சம் ரூபாய் ஒருவர் செலுத்தினால் அவரது கணக்கில் சில இலட்சங்கள் உடனடியாக வரவு வைக்கப்படும். விளையாட்டில் வெற்றி பெற்றால் வெற்றி தொகையும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படும்.

பெருந்தொகையை வைப்பிலிடும் சந்தர்ப்பங்களில் விளையாட்டு படிமுறைகளை நிறைவேற்றவில்லை என்று கூறி ஒரு கட்டத்தில் அந்த விளையாட்டு குழுவில் இருந்து நீக்கப்படுகின்றனர். இதை நம்பி பெருந்தொகையான பணத்தை செலுத்தியோர் பலர் பணத்தை இழந்துள்ளனர்.

இது தொடர்பாக எவர் மீதும் குற்றச்சாட்டுப் பதிவு செய்ய முடியாத நிலைமையே காணப்படுகின்றது. அந்தக் குழுவில் உள்ளவர்களிடையே பணம் பரிமாற்றப்பட்டு, ஒரு சங்கிலித் தொடராக இது மேற்கொள்ளப்படுவதால் இறுதியில் பணத்தை பெற்றுக்கொள்வது யார் என்பதை கண்டுபிடிப்பதும் கடினமானது. ஆகையால் இவ்வாறான விளையாட்டுச் செயலிகள் மூலம் நடக்கும் பண மோசடி தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

இந்தப் பண மோசடியில் சிக்கிய பலர் உள்ளபோதும் அவர்களால் முறைப்பாடு செய்ய முடிவதில்லை. யாருக்கு எதிராக முறைப்பாடு செய்வது என்கிற சிக்கலின் காரணமாகவே பலர் இது தொடர்பில் மௌனமாக இருக்கின்றனர். தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்தலின் பின்னணியில் இவ்வாறான மோசடிகளும் உள்ளன. இவ்வாறான செயலிகளை மக்கள் உபயோகப்படுத்தாமல் தவிர்ப்பதே புத்திசாலித்தனம் - என்றார்.

(ஐ)



# ஆயிரம் மாணவர்களுக்கு இலவச கணனி கற்கைநெறி!

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாணத்தில் இலவச கணனி கற்கைநெறியை வழங்கும் விதமாக மை ட்ரீம் அக்கடமி நேற்று திறந்து வைக்கப்பட்டது. தென்னிந்திய இசையமைப்பாளர் சந்தோஷ் நாரயணன் இந்த நிலையத்தை திறந்து வைத்தார்.

யாழ். மாவட்ட மாணவர்கள், இளைஞர்களின் கணனி அறிவை வளர்க்கும் முகமாக முற்றிலும் இலவசமான கோடிங் (Coding) கற்கைநெறியின் உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்வு நல்லூர் சங்கிலியன் மன்றத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தென்னிந்திய இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன், அவரின் பாரியார் மீனாட்சி சந்தோஷ், யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா ஆகியோர் கலந்துகொண்டு கற்கைநெறிகளை ஆரம்பித்து வைத்தனர்.

சிறப்பு விருந்தினராக யாழ் மாநகர சபையின் ஆணையாளர் இ. த.ஜெயசீலனும் பங்கேற்றார்.

இக்கற்கைநெறிகளை யாழ். மாவட்டத்தில் வழங்குவதற்காக அங்கஜன் இராமநாதனின் ”என் கனவு யாழ்” அறக்கட்டளையுடன் பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக பெரேராவின் டி. பி. எடியுகேசன் அறக்கட்டளை கைகோத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

முதல்கட்டமாக யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட சுமார் 1200 மாணவர்கள் வருடாந்தம் பயன்பெறும் வகையில் மாவட்டத்தின் முதலாவது மை ட்ரீம் அக்கடமி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)



# கைத்தொழில்துறை மேம்பாடு; யாழில் கலந்துரையாடல் நடந்தது!

யாழ்ப்பாணம், ஒக். 23

வடக்குக்கான கைத்தொழில் துறைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் துறைகள் மேம்பாடு தொடர்பிலான கருத்துரை நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை வடக்குக்கான கைத்தொழில் துறைகள் மன்ற பணிமனையில் நடைபெற்றது.

வடக்குக்கான கைத்தொழில் துறைகள் மன்றத்தின் தலைவர் கே. பூரணச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் “வர்த்தகம் மற்றும் கைத்தொழில் துறைகள் மேம்பாடு” என்கிற தலைப்பில் சமூக பொருளாதார ஆய்வாளரும் ஆலோசகருமான செல்வின் இரேனியஸ் கருத்துரை வழங்கினார்.

வடக்கின் சிறிய, நடுத்தரக் கைத்தொழில் முயற்சியாளர்கள், வர்த்தகர்கள் இந்நிகழ்வில் பங்கேற்று பயனடைந்தனர்.

மேலும் இந்நிகழ்வில், வடக்குக்கான கைத்தொழில் துறைகள் மன்றத்தின் துணைத் தலைவர் சங்கரப்பிள்ளை நகுலேஸ்வரன், ஆறுதல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜெயமுருகன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

தொடர்ந்தும் எமது முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை கூட்டாக எதிர்கொள்வது தொடர்பிலும் தொழில் முயற்சியோடு தொடர்புடைய பல்வேறு அரச, தனியார் துறை வல்லுநர்களையும் எதிர்காலத்தில் அழைத்து உரையாடல் நடத்துவது தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இப்படியான வர்த்தக மேம்பாடு ஆலோசனைகள் அதனூடாக துறைசார் அனுபவங்களை பெற்றுக் கொள்வதன் மூலம் தங்களது தொழில் முயற்சிகளை மேலும் விரிவாக்கி கொள்ள உதவிக்கரமாக இருக்கும் என இந்நிகழ்வில் பங்கேற்ற முயற்சியாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

(ஐ)

# யாழ்ப்பாண பல்கலையில் திருமந்திர ஆய்வு மாநாடு!

யாழ்ப்பாணம், ஒக். 23

அகில இலங்கை சைவ மகா சபையுடன் யாழ். பல்கலைக்கழக சைவ சித்தாந்ததுறை இணைந்து ‘ஒன்றே குலமாய் திருமந்திரம் காட்டும் அன்பே சிவத்திற்கு உயிர்கொடுப்போம்’ எனும் தொனிப்பொருளில் நடத்தும் திருமந்திர ஆன்மீக மாநாடு எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30மணி முதல் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

சைவ சித்தாந்த துறைத்தலைவர் கலாநிதி பொன்னத்துரை சந்திரசேகரம் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டுக்காக 50 திருமந்திரங்கள் தெரிவு செய்யப்பட்டு வடக்கு, கிழக்கு, மலையகம் தழுவியரீதியில் அறநெறி மாணவர்களிடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதேவேளை, எதிர்வரும் வாரத்தை திருமந்திர வாரமாகவும் அகில இலங்கை சைவ மகா சபை மற்றும் யாழ். பல்கலைக்கழக சைவ சித்தாந்ததுறை பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த வாரத்தில் திருமூலரின் திருமந்திரத்தை அறிதல், பிறருக்கு தெளிவூட்டுதல் ஆகிய செயல்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளது.




மாநட்டின் நிறைவில் திருமந்திர மாநாட்டு மலர் ஒன்று வெளியீடு செய்துவைக்கபடவுள்ளது. இந்தியாவிலிருந்து ஓய்வு நிலை பேராசிரியர் கலாநிதி அருணை பாலராவாயன் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளார்.

இந்த மாநாட்டில் யாழ். மாவட்ட செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக இந்து கற்கைகள பீட பீடாதிபதி சிவசிறீ சர்வேஸ்வர ஐயர் பத்மநாதன், செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், மட்டக்களப்பு மாவட்ட இந்து கலாசார திணைக்கள உத்தியோகத்தர் கிருஷ்ண பிள்ளை குணநாயகம் ஆகியோர் பங்கேற்பர்.

கௌரவ விருந்தினர்களாக இந்து நாகரிகதுறை தலைவர் யாழ் பல்கலைக்கழக கலாநிதி சுகத்தினி முரளிதரன், கிழக்கு பல்கலைக்கழக இந்து நாகரிக துறை தலைவர் நாகையா வாமன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவர்களுடன், நல்லை திருஞானசம்பந்தர் ஆதினம், தென்கையிலை ஆதீனம், மெய்கண்டார் ஆதீனம், தருமை ஆதீன கிளைமடம் திருக்கேதீச்சரம், திருநாவுக்கரசர் ஆதீனம் நுவரெலியா, சிவகுரு ஆதினம் நல்லூர் ஆகியவற்றின் குரு முதல்வர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் வேலைத் திட்டம் விரைவாக்கப்படும்!

## நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஒக். 23

**அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பு வேலைத் திட்டத்தை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகளை வழங்கும் வகையில் நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் வேலைத்திட்டம் தற்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அநுராதபுரத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தும்போதே நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் வெளிநாட்டு கடனை மேம்படுத்தும் வேலைத்திட்டம் தொடர்பில் தேவையான கலந்துரையாடல்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்று இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (ஐ)

# ஒரு கோடி வாக்குகளை ரணிலுக்கு வழங்குங்கள்

## வஜிர அபேவர்த்தன எம். பி.

கொழும்பு, ஒக். 23

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 100 இலட்சம் வாக்குகளை வழங்கி ஜனாதிபதி கதிரையில் அமரச் செய்யுங்கள் என வஜிர அபேவர்த்தன எம். பி. தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியை சீர் செய்து நாட்டை கட்டியெழுப்பிய தலைவர் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

அனைவரும் ஒன்றிணைந்து அடுத்த தேர்தலில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்ய வேண்டும் என்று நேற்று முன்தினம் நடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டத்தில் தெரிவித்தார். (ஐ)

# பொலிஸிடம் இருந்து தப்பிய பெண் கொழும்பில் கைது!

கொழும்பு, ஒக். 23

குருநாகல் பொலிஸ் பாதுகாப்பில் இருந்து தப்பிச் சென்ற இளம் பெண்ணொருவர் கொழும்பு முகத்துவாரம் (மோதரை) பகுதியில் வைத்து மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல் வேவ்கல பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளம் பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட இந்தப் பெண் சந்தேக நபர் குருநாகல் பொலிஸாரிடம் இருந்து தப்பி சென்றிருந்தார்.

கைதான பெண், சில தினங்களுக்கு முன்னர் குருநாகல் பொலிஸாரால் சுமார் 7 கிராம் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, மேலதிக விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த போது பொலிஸ் பிடியில் இருந்து தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்தேகநபர் முகத்துவாரத்தில் வீடொன்றில் மறைந்திருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# பிரான்ஸ் செல்ல முயன்றவர் லெபனான் சிறைச்சாலையில்!

## மீட்டுத் தருமாறு குடும்பத்தினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 23

முகவர் ஒருவரை நம்பி பிரான்ஸ் செல்ல முயன்ற யாழ்ப்பாணம் - கொழும்புத்துறையைச் சேர்ந்த ஒருவர் லெபனான் நாட்டின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும் அவரை மீட்டுத் தருமாறும் அவரின் குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்புத்துறை - வசந்தபுரத்தை சேர்ந்த புவனேஸ்வரன் சயந்தன் என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு லெபனான் நாட்டின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவரது மனைவி,

பிரான்ஸ் நாட்டுக்கு செல்வதற்கு முகவர் ஒருவரை நம்பி விமானம் மூலம் வெவ்வேறு நாடுகளுக்கு சென்று லெபனான் ஊடாக பிரான்ஸ் செல்வதற்காக இருந்தபோது உரிய ஆவணங்கள் இல்லை என்பதற்காக கைது செய்யப்பட்டு லெபனான் சிறையில் வைக்கப்பட்டுள்ளார் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் அறிவிக்கப்பட்டது.

வறுமை காரணமாக பிரான்ஸ் செல்வதற்காக எனது கணவர் கடந்த ஜூன் மாதம் இலங்கையில் இருந்து புறப்பட்டார். ஐந்து மாதங்கள் கடந்துள்ள நிலையில் லெபனான் நாட்டின் சிறையில் உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

லெபனான் அருகில் உள்ள இஸ்ரேல் நாட்டில் யுத்தம் இடம்பெறுவதால் எமக்கு பயமாக உள்ளது. வறுமை நிலை இருந்தாலும் எனது கணவர் எனக்கு முக்கியம். எனது கணவரை நாட்டுக்கு மீட்டுத்தர உதவ வேண்டும் - என்றார். (ஐ)

# வரி செலுத்த வேண்டிய பலர் அதனை செலுத்துவதில்லை!

## நிதி இராஜாங்க அமைச்சர் கவலை



கொழும்பு, ஒக். 23

வரி செலுத்த வேண்டிய பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வரி செலுத்துவதில்லை. அதிக வரிச்சுமையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

நாங்கள் இன்னும் விரும்பிய இலக்குகளை அடையவில்லை. உலகிலேயே மிகக்குறைந்த வரி வருவாயை கொண்ட நாடு நாம்தான். இலக்கை நோக்கி எங்கோ சென்று கொண்டிருக்கிறோம். அப்படித்தான் இருக்க வேண்டும்.

ஆனால், அது சுருங்கிய பொருளாதாரத்துடன் செல்ல வேண்டும். அதேசமயம் வங்கி வட்டி வீதங்கள் அதிகரித்து, வியாபாரம் பாதிக்கப்பட்டு, வருமானம் குறைந்துள்ளது. ஓர் அரசாங்கம் வரி விதிக்க வேண்டும். முடிந்தவரை, வரிகளால் பாதிக்கப்பட்ட துறைகளுக்கு நிவாரணம் வழங்க நாங்கள் பணியாற்றுகிறோம். வரி அடிப்படையை அதிகரிப்பதே எங்கள் இலக்கு.

உண்மையில் வரி செலுத்த வேண்டிய பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வரி செலுத்துவதில்லை. வரி செலுத்த அவர்களை வழிநடத்துதல் மற்றும் அதிக வரிச்சுமையை சுமப்பவர்களுக்கு முறையாக நிவாரணம் வழங்குதல் ஆகியவற்றை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவோம் - என்றார். (ஐ)

# யாழ். வந்த பழங்குடியினர் நாக விகாரையில் தரிசனம்



கொழும்பு, ஒக். 23

யாழ்ப்பாணம் வந்த பழங்குடியினர் நேற்றைய தினம் நயினாதீவு நாக விகாரையை தரிசித்தனர்.

மகியங்கனையில் வசித்து வரும் பழங்குடியினர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்தனர்.

இவர்கள், யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூர், கோட்டை உள்ளிட்ட பல்வேறு வரலாற்று சிறப்புமிக்க இடங்களை பார்வையிட்டனர்.

இந்த நிலையில், நேற்றைய தினம் இந்தக் குழுவினர் நயினாதீவு நாக விகாரைக்கு சென்றனர். அத்துடன், அவர்கள் விகாரதிபதியையும் சந்தித்து அவரிடம் ஆசி பெற்றனர். (ஐ)

# “தனியார் மயமாகும் ரெலிக்கொம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவோம்!”

கொழும்பு, ஒக். 23

தனியார் மயமாக்கலுக்கு எதிராக தொடர் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக சிறீ லங்கா ரெலிக்கொம் ஊழியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சிறீ லங்கா ரெலிக்கொம் நிறுவனத்தை தனியார் மயமாக்கும் தீர்மானத்தை எதிர்த்து அடுத்த மாதம் பாரிய வேலை நிறுத்தப் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக தொலைத்தொடர்பு ஊழியர் சங்கத்தின் தலைவர் ஜகத் குருசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கான மதிப்பீட்டு பணியில் சர்வதேச நிறுவனம் ஒன்று ஈடுபட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக வங்கியுடன் இணைக்கப்பட்ட சர்வதேச நிறுவனம் குறித்த நடவடிக்கைகளுக்காக இலங்கையில் செயல்பட்டு வருகிறது. அத்துடன், அத்தகைய நிறுவனம் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிமை இல்லை.

உலக வங்கி கடன்களை வழங்கும் அதேவேளை, உள் விவகாரங்களில் தேவையற்ற தலையீடுகளை மேற்கொள்கிறது. இந்த பின்னணியில் பெரும் சதி இருப்பதாகவும் நாட்டின் வளங்களை விற்பனை செய்ய முடியாது எனவும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# இஸ்ரேலில் உயிரிழந்த இலங்கையரை அடையாளம் காண மரபணு சோதனை

கொழும்பு, ஒக். 23

இஸ்ரேலில் இடம்பெற்ற மோதல்களின்போது உயிரிழந்த அனுலா ரத்நாயக்கவின் சடலத்தை அடையாளம் காண மரபணு பரிசோதனையை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இதற்காக அவரின் இரண்டு பிள்ளைகள் மற்றும் அவரின் சகோதரியின் மரபணு மாதிரிகள் பரிசோதிக்கப்படவுள்ளன.

இவர்களின் மரபணு மாதிரிகளை இஸ்ரேலுக்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக நிமல் பண்டார குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலின் பின்னர் காணாமல் போயிருந்த இலங்கையை சேர்ந்த அனுலா ரத்நாயக்க உயிரிழந்தார். அந்நாட்டு பொலிஸார் கடந்த 17ஆம் திகதி உறுதிப்படுத்தியிருந்தனர்.

கடந்த 7ஆம் திகதி இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலின் பின்னர் காணாமல்போன அனுலா ரத்நாயக்க, குறித்த தாக்குதலின்போது உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், உரிய பணிகள் நிறைவடைந்தவுடன் உயிரிழந்தவரின் குடும்ப உறுப்பினர்களுக்கு உடல் அனுப்பி வைக்கப்படும் என தூதரகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# யூரியா உரத்தின் விலை அதிகரிக்கப்படலாம்!

## விவசாய அமைச்சர் அறிவிப்பு



**கொழும்பு, ஒக். 23**

**உக்ரைன் -ரஷ்யா யுத்தம், இஸ்ரேல் - ஹமாஸ் யுத்தம் என யுத்தங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதால் உலக சந்தையில் யூரியா உரம் உட்பட அனைத்து உரங்களின் விலையும் உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

இதேவேளை உரத்துக்கான கேள்வி கோரலை மூன்று மாதங்களாக தாமதப்படுத்திய இரண்டு அதிகாரிகளை விவசாய அமைச்சில் இருந்து உடனடியாக நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த பருவத்தில் விவசாயிகளுக்கு தேவையான யூரியா உரத்தை கூடிய விரைவில் கொள்வனவு செய்வதற்கு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. விவசாய அமைச்சின் உரம் தொடர்பான அதிகாரிகளுக்கு உரிய கேள்வி கோரலை அழைக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆனால், அமைச்சரவை ஒப்புதல் அளித்து மூன்று மாதங்கள் கடந்தும், அதை கையாளும் இரண்டு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் யூரியா கேள்வி கோருவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது.

# மின்சார கட்டண அதிகரிப்பு; வழக்கு தாக்கல் செய்ய முடிவு

*கொழும்பு, ஒக். 23*

மின்சார கட்டண அதிகரிப்புக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய உள்ளதாக மின் பாவனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மின்சாரன கட்டணத்தை அதிகரிப்பதற்கு பொது பயன்பாடுகள் ஆணைக்குழு வழங்கிய அனுமதி சட்டவிரோதமானது என அந்த சங்கத்தின் செயலாளர் சஞ்ஜீவ தம்மிக சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், வருடமொன்றுக்கு மூன்று தடவைகள் மின் கட்டணத்தை அதிகரிக்க மின்சார சபை சட்டத்தில் இடமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், மின்சார கட்டணத்தை அதிகரிக்க மின்சார சபை முன்வைத்த 4 காரணங்களும் பொய்யானவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# 10 ஆயிரம் ரயில் சேவைகள் கடந்த ஆண்டில் இரத்தாகின

*கொழும்பு, ஒக். 23*

2022ஆம் ஆண்டில் மாத்திரம் 10 ஆயிரத்து 77 ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன என்று தேசிய கணக்காய்வாளர் பணிமனை தெரிவித்துள்ளது.

அத்துடன், கடந்த ஆண்டு ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 993 ரயில்கள் இயக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அவற்றில், 32 ஆயிரத்து 844 ரயில்கள் மாத்திரமே உரிய நேரத்தில் சேவையில் ஈடுபட்டுள்ளன. இந்தநிலையில் 88 ஆயிரத்து 149 ரயில்கள் உரிய நேரத்தில் இயக்கப்படவில்லை எனவும் தேசிய கணக்காய்வாளர் பணிமனை தெரிவித்துள்ளது. (ஐ)

# மின் கட்டணம் அதிகரிப்பு குறித்து கட்சி தலைவர்களுடன் பேசுவேன்!

## மகிந்த ராஜபக்ஷ எம். பி.

*கொழும்பு, ஒக். 23*

மின்சார கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பது தொடர்பில் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடவுள்ளார் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மின்சார கட்டண அதிகரிப்பு தொடர்பில் மக்களிடம் இருந்து பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

மின்சார கட்டணத்தால் மக்கள் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர். தான் பயணிக்கும் அனைத்து இடத்திலும் தமது சிரமங்களை வெளிப்படுத்தி வருகின்றனர் என்றும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கொலன்னாவை பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ஐ)

# கல்வி அமைச்சின் முன்பாக நாளை ஆசிரியர்கள் போராட்டம்!

*கொழும்பு, ஒக். 23*

கொழும்பிலுள்ள கல்வி அமைச்சின் தலைமை பணிமனை முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

ஆசிரியர் மற்றும் அதிபர்களின் ஒன்றிணைந்த தொழிற்சங்கள் இணைந்து நாளைய தினம் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

நாட்டின் பாடசாலைகளின் செயல்பாடுகளுக்கு போதுமான நிதி வழங்கப்படாமை பெரும் பிரச்சனையாக மாறியுள்ள நிலையில், பாடசாலையின் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், பல முக்கிய விடயங்களை முன்வைத்து ஆசிரியர் மற்றும் அதிபர்களின் ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனம் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, 30 தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்து இந்த ஆர்ப்பாட்டத்தை நாளை நடத்தவுள்ளன. (ஐ)

# டெங்கு நோயின் தாக்கம் நாட்டில் மேலும் அதிகரிப்பு

*கொழும்பு, ஒக். 23*

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக தற்போது டெங்கு நோய் தாக்கம் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 66 ஆயிரத்து 476 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேல் மாகாணத்தின் பல பகுதிகளிலும் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்திலும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்களுக்கு அருகில் டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கான வாய்ப்பு அதிகளவில் காணப்படுவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார். (ஐ)

# ஐக்கிய தேசியக் கட்சியை யாரும் அழித்துவிட முடியாது!

## ரவி கருணாநாயக்க



*கொழும்பு, ஒக். 23*

அடிப்படைவாதத்தால் தற்காலிகமாக வீழ்த்தப்பட்டாலும் ஐக்கிய தேசிய கட்சியை எவராலும் ஒட்டுமொத்தமாக அழித்துவிட முடியாது. எனவே அதிகாரத்தை கைப்பற்றி நாட்டை அபிவிருத்தியடையச் செய்வதற்கான பயணத்தில் அனைவரையும் தம்முடன் கைகோக்குமாறு ஐ. தே.கவின் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்

ஐ.தே.க.வின் விசேட சம்மேளனம் கொழும்பு - சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும்,

ஐ.தே.கவின் 77ஆவது சம்மேளனம் மாத்திரமின்றி, கட்சிக்கான புதிய யாப்பும் அறிமுகப்படுத்தப்பட் டுள்ளமையால் இது விசேட சம்மேளனமாக அமைந்துள்ளது. ஐ.தே.க. என்பது குடும்ப கட்சியல்ல. எமது கட்சி ஒரு குடும்பமாக செயல்பட்டுக்கொண்டி ருக்கிறது. ஐ. தே. க. என்பது நாட்டை கட்டியெழுப்பும் கட்சியாகும்.

2015இல் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டு கையளிக்கப்பட்ட நாடு, 2022இல் மீண்டும் வங்குரோத்து நிலைக்கு உள்ளாக்கப்பட்டு ஐ. தே. கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சிகளால் கற்பனைக் கதைகளைக் கூற முடியும். நாட்டை குழப்ப முடியும். அடிப்படைவாதத்தை தோற்றுவிக்க முடியும். சிலர் ஆசை, ஆனால் பயம் என்றவாறு செயல்பட முடியும். இனவாதம், அடிப்படைவாதம், மதவாதம் போன்ற தீவிரவாதங்களை ஏற்படுத்த முடியும்.

இவ்வாறான செயற்பாடுகளால் ஐ.தே.க. தற்காலிகமாக வீழ்த்தப்பட்டாலும், ஒருபோதும் இக்கட்சியை முற்றாக இல்லாதொழிக்க முடியாது என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன். 2015இல் பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்த நிலையில் இந்நாட்டை தற்போதைய ஜனாதிபதி, அன்றைய பிரதமராக பொறுப்பேற்றார். அதன் பின்னர் 30 மாதங்களுக்குள் அரசாங்கத்தின் வருமானத்தை நூறு வீதமாக அதிகரிக்க எம்மால் முடிந்தது.

எம்மால் மிகவும் கஷ்டப்பட்டு கட்டியெழுப்பப்பட்ட பொருளாதாரம் மிகக் குறுகிய காலத்தில் முற்றாக சீர்குலைக்கப்பட்டு, நாடு வங்குரோத்து நிலைக்கு உள்ளாக்கப்பட்டது. எவ்வாறிருப்பினும் பாராளுமன்றத்தில் தனி யானையாக சவாலை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இன்று அந்த சவாலில் வெற்றி பெற்றுள்ளார். பொது வெளியில் விமர்சித்துக் கொண்டிருப்பவர்கள், மறைமுகமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

நாடு வீழ்ச்சியடைந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும், ஐ.தே.க. அதனை மீட்டாலும் மக்கள் ஆணை கிடைக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் தாய் வீட்டின் உறுப்பினர்களைப் பார்த்துக்கொள்ளவதில் ஏற்பட்ட தோல்வியும் அதற்கான ஒரு காரணமாகும். கசப்பானாலும் உண்மையைக் கூற வேண்டியது அவசியமாகும். இதன் காரணமாகவே கடந்த தேர்தலில் 30 இலட்சம் வாக்குகளை இழக்க நேரிட்டது. இதன் மூலம் மக்கள் வழங்கிய செய்தியை புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

இன்று புதிய யாப்புடன் புதிய பயணத்தை தொடங்க வேண்டும். அதற்கமைய மீண்டும் நிர்வாக அதிகாரத்தைப் பெறும் நிலைக்கு 2024இல் கட்சியை வலுப்படுத்த வேண்டியது அவசியமாகும். எம்மில் குறைபாடுகள் காணப்படலாம். அவற்றை சரி செய்து முன்னோக்கி பயணிப்பதற்கான காலம் தற்போது உருவாகியுள்ளது. எனவே அதிகாரத்தை கைப்பற்றி, நாட்டை அபிவிருத்தியடைச் செய்வதற்கு எம்முடன் கைகோர்க்குமாறு அழைப்பு விடுக்கின்றேன் - என்றார். (ஐ)

# சிங்களவரை வெளியேறுமாறு கூறியதாக தவறான பிரசாரம்

## ஆளுநர் செந்தில் தொண்டமான்

கொழும்பு, ஒக். 23

**சிங்களவர்களை தமது பகுதிகளிலிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதாக தவறான கருத்துகள் சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படுகிறது என்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.**

**அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனை அவர் தெரிவித்தார்.**

கடந்த இரண்டு மூன்று நாட்களாக சில பிக்குமார் இந்த நாட்டின் ஜனாதிபதியையும் என்னையும் குறைகூறி ஊடக அறிக்கைகள் வெளியிட்டு வருகின்றனர். அது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டிய கடமை எனக்கு உள்ளது.

இந்த நாட்டில் அரசாங்கத்தின் இடத்தை அது சிங்கள மக்களாக இருக்கட்டும், தமிழ் மக்களாக இருக்கட்டும், கிறிஸ்தவ மக்களாக இருக்கட்டும் அல்லது முஸ்லிம் மக்களாக இருக்கட்டும் யாராக இருந்தாலும் அரச இடத்தை கைப்பற்றவோ சட்டவிரோதமாக பிடிக்க முயற்சித்தாலும் கண்டிப்பாக அவர்கள் மீது ஒரே விதமாகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், தற்போது பிரசாரம் செய்கிறார்கள். நாங்கள் சிங்களவர்கள் எங்களை எங்களுடைய இடத்திலிருந்து வெளியேபோக சொல்கிறார்கள் என்று.

அது முற்றிலும் தவறான விடயம். தனியார் இடங்களாக இருந்தால் கண்டிப்பாக அரசாங்கம் அதில் தலையிடப் போவதில்லை.

எனினும், அரசாங்க இடத்துக்குள் யார் நுழைந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும். மதங்களை காட்டி இதனை பிரச்னைப்படுத்துகிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் இது நாகரிகமான செயல் கிடையாது - என்றும் கூறினார். (ஐ)

# புனரமைக்கப்பட்ட பாலர் பாடசாலை திறப்பு விழா!



மட்டக்களப்பு, ஒக். 23

ஒந்தாச்சிமடத்தில் 150 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் பாரதி பாலர் பாடசாலை இணைந்த கரங்கள் அமைப்பினால் புனரமைப்பு செய்யப்பட்டது.

புனரமைப்பு செய்யப்பட்ட பாடசாலையை கையளிக்கும் நிகழ்வு பாரதி பாலர் பாடசாலை அதிபர் திருமதி வி. அமிர்தகலா தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இணைந்த கரங்கள் அமைப்பின் தலைவர் கனகராஜ் பங்கேற்றார்.

இந்த பாலர் பாடசாலை இணைந்த கரங்கள் அமைப்பின் கொடையாளர்களான கனகராஜ் நடராசமணி குடும்பம், தினேஸ்ராஜ் ஜனபாலசந்திரன் குடும்பத்தினரின் நிதி உதவியுடனும் இணைந்த கரங்கள் அமைப்பின் உறவுகளின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# விபுலானந்தா சிறார்களின் கலைவாணி விழா ஊர்வலம்

காரைதீவு, ஒக். 23

காரைதீவு விபுலானந்தா முன்பள்ளி பாடசாலையின் வருடாந்த கலைவாணி விழா ஊர்வலம் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது.

பாடசாலை ஆசிரியைகளான ரம்யா, சனுஜா ஆகியோர் ஆகியோர் தலைமையில் இந்த ஊர்வலம் நடைபெற்றது.

ஊர்வலத்தின்போது ரமணன், அஜந்தன், தினேஷ்குமார் உள்ளிட்டோர் நீராகாரம் வழங்கினர்.

கல்லூரி பணிப்பாளர் வி. ரி. சகாதேவராஜா அதிதியாக பங்கேற்றார். (ஐ)

# மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் விசேட நடமாடும் சேவை நடைபெற்றது!



மட்டக்களப்பு, ஒக். 23

மோட்டார் போக்குவரத்து திணைக்களமும் மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் விசேட நடமாடும் சேவை நேற்று முன்தினம் சனிக்கிழமை மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறீகாந் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பலர் கலந்துகொண்டனர் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்களுக்கான உரிமை மாற்றம் செய்வதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், ஏற்கனவே விண்ணப்பித்தவர்களுக்கான உரிமை மாற்றம் செய்யப்பட்ட சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

உரிமை மாற்றத்திற்காக விண்ணப்பித்து இதுவரை தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கான தீர்வு காணல், பதிவுச் சான்றிதழ்களில் திருத்தம் மேற்கொள்ளல், வாகனங்களை பரிசீலித்து நிறைச் சான்றிதழ் மற்றும் அடையாளச் சான்றிதழ் வழங்குதல், சகல வாகனங்களுக்கான உரிமை மாற்றல் விண்ணப்பங்களை பொறுப்பேற்றல் போன்ற சேவைகளும் நடைபெற்றன.

எழுத, வாசிக்க தெரியாத தேர்ச்சி குறைந்த நபர்களுக்காக வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு விசேட பரீட்சை நடாத்தப்பட்டதுடன், நீண்ட காலமாக வாகன வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள முடியாத, ஆவணங்களில் குறைபாடுகளுடன்கூடிய வாகனங்களுக்காக மீண்டும் வருமான அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்வதற்கு சிபாரிசுக் கடிதங்கள் வழங்குதல், சிலிண்டர் கொள்ளளவு 50இற்கும் குறைந்த மோட்டார் சைக்கிள்களை (மொபேட்) பதிவு செய்தல், சாரதி அனுமதிப்பத்திரங்கள் பெறுவதற்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளல்.

விசேட தேவையுடைய நபர்களுக்காக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குத் தேவையான வைத்திய தொழினுட்பக் குழுவின் சிபாரிசுகளை வழங்குதல், மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகளின் தெளிவற்ற செஸி மற்றும் எஞ்சின் இலக்கங்களை தேசிய ரீதியாக அச்சிடல், பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்தல் போன்ற சேவைகளும் இதன்போது வழங்கப்பட்டன. (ஐ)

# அம்பாறையில் மீன்களின் பிடிபாடு அதிகரிப்பு!

அம்பாறை, ஒக். 28

அம்பாறையில் அண்மைக் காலமாக கரைவலை மூலம் அதிகளவான மீன்கள் பிடிபட்டுள்ளன.

கல்முனை சாய்ந்தமருது பிரதேசங்களில் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான கீரி மீன்களை மீனவர்கள் பிடித்தனர் என்று கூறப்படுகின்றது.

கடலரிப்பால் வாழ்வாதாரத்தை இழந்த மீனவர்களுக்கு, கரைவலை மூலம் அதிக இலாபம் கிடைக்கப்பெற்றமை மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

3 கிலோ கீரி மீன்கள் 500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# "வடக்கு, கிழக்கு பிரச்னை தீர்வு விவகாரத்தில் ஜனாதிபதி ஒருதலைபட்சமாக செயல்படுகிறார்"

கொழும்பு, ஒக். 23

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் விவகாரத்தில் ஜனாதிபதி ஒருதலைப்பட்சமாக செயல்படுகிறார். சிங்களவர்களுக்கு ஒரு சட்டம், தமிழர்களுக்கு ஒரு சட்டம் அமுல்படுத்தப்படுகிறது. திம்புலாகல பகுதியில் உள்ள சிங்களவர்களை வெளியேற்ற ஒருபோதும் இடமளிக்க முடியாது என்று கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் தரை விவகாரத்தை முன்னிலைப்படுத்தி மட்டக்களப்பு, திம்புலாகல சிங்கள கிராமத்தில் வாழும் சிங்கள மக்களை வெளியேற்றுமாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ் பிரதிநிதிகள் தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள்.

மயிலத்தமடு பண்ணை மேய்ப்பாளர்களின் பிரச்னைகளுக்கு மாற்றுத்திட்டங்களை செயற்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இருப்பினும் சிங்களவர்கள் அப்பகுதியில் இருக்கக்கூடாது என்ற நோக்கத்தில் இருந்து கொண்டு ஒரு தரப்பினர்கள் செயற்படுவதால் மாற்றுத்திட்ட அமுலாக்கம் தடைப்பட்டது.

மட்டக்களப்பு திம்புலாகல பகுதியில் வாழும் சிங்களவர்கள் யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டார்கள். யுத்த காலத்தில் தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட சிங்களவர்கள் பொலநறுவை, ஹபரணை மற்றும் அம்பாறை ஆகிய பகுதிகளில் வாழ்ந்தார்கள். யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் உரிய ஆவணங்களுடன் திம்புலாகல பகுதியில் சிங்களவர்கள் மீண்டும் குடியேறினார்கள்.

மயிலத்தமடு மாதவனை பகுதி பண்ணை மேய்ப்பாளர்களின் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்காக திம்புலாகல பகுதியில் வாழும் சிங்களவர்களை வெளியேற்றுமாறு குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. சிங்களவர்களை அவர்களின் பாரம்பரிய கிராமத்தில் இருந்து வெளியேற்ற எவருக்கும் அதிகாரமில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் விவகாரத்தில் ஜனாதிபதி ஒருதலைப்பட்சமாக செயல்படுகிறார். சிங்களவர்களுக்கு ஒரு சட்டம், தமிழர்களுக்கு ஒரு சட்டம் அமுல்படுத்தப்படுகிறது. வடக்கு மற்றும் கிழக்கில் சிங்களவர்கள் வாழக்கூடாது என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு தமிழ் அரசியல் தரப்பினர் செயல்படுவதால் முரண்பாடற்ற தீர்வு காண முடியாமல் உள்ளது. பிரச்னைகள் நீண்டு செல்கின்றன - என்றார். (ஐ)

# காஸாவுக்குள் அமெரிக்காவின் டெல்டா படையும் நுழைய தயார்!

டெல் அவிவ், ஒக். 23

**பலஸ்தீனத்தின் காஸா பகுதிக்குள் தரைவழியாக நுழைய இஸ்ரேல் இராணுவம் தயார் நிலையில் இருக்கிறது. இதற்காக முன்வரிசையில் இஸ்ரேலின் டெடி பீர் என்றழைக்கப்படும் அதிநவீன புல்டோசர்கள் நிறுத்தப்பட்டுள்ளன.**

இதனிடையே இஸ்ரேல் இராணுவத்தினருடன் அமெரிக்க இராணுவத்தின் டெல்டா படையும் காஸாவுக்குள் நுழையவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி பைடன் இஸ்ரேல் சென்றபோது டெல்டா படையினரை சந்தித்துப் பேசினார். அமெரிக்க இராணுவத்தின் டெல்டா வீரர்கள் ஆப்கானிஸ்தான், ஈராக், குவைத், சிரியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில்இ ரகசிய ராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இதேபோல பலஸ்தீனத்தின் காஸா பகுதியிலும் ஹமாஸ் தீவிரவாதிகளை அழிக்கும்



இரகசிய நடவடிக்கையில் டெல்டா படையினர் ஈடுபடவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. சுமார் 13 ஆயிரம் படையினர் இஸ்ரேலில் முகாமிட்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது. (ஐ)

# மூன்றாம் உலகப் போர் மூளும் அபாயம் உள்ளது

## பாதுகாப்பு துறை நிபுணர்

டெல் அவிவ், ஒக். 23

இஸ்ரேல், ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு இடையிலான போரால் மூன்றாம் உலகப் போர் மூளும் அபாயம் உள்ளது என்று பாதுகாப்பு துறை நிபுணர் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து பாதுகாப்பு சார்ந்த செய்திகளை வெளியிடும் யுரேசியா குறூப் நிறுவுநர் இயான் பிரேமர் கூறியதாவது:

இஸ்ரேல் இராணுவம், பலஸ்தீனத்தின் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு இடையே போர் நடைபெற்று வருகிறது. காஸா பகுதி மக்களுக்கு ஆதரவாக லெபனானின் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் இஸ்ரேலுக்கு எதிராக நேரடியாக போர் தொடுக்க வாய்ப்பிருக்கிறது. சுமார் ஒரு இலட்சம் படையினர், 2 இலட்சம் அதிநவீன ஏவுகணைகள், ஏராளமான பீரங்கிகளை கொண்ட ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் நேரடியாக போரில் இறங்கினால் பாதிப்புகள் அதிகமாக இருக்கும்.

இஸ்ரேல் இராணுவம் தரைவழி தாக்குதலை தொடங்கினால் முஸ்லிம் நாடுகளில் கொந்தளிப்பு ஏற்படும். பலஸ்தீன மக்களுக்காகவும் முஸ்லிம் நாடுகளுக்கு ஆதரவாகவும் ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகள் குரல் எழுப்பி வருகின்றன. இதே சூழல் நீடித்தால் அமெரிக்கா தலைமையில் ஓரணியும் ரஷ்யா, சீனா தலைமையில் எதிரணியும் போரில் களமிறங்க வாய்ப்பிருக்கிறது. எனவே, இஸ்ரேல்-ஹமாஸ் இடையிலான போர் 3ஆம் உலகப்போராக மாறக்கூடிய ஆபத்து அதிகம் இருக்கிறது - என்றார். (ஐ)

# மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் இந்தியாவின் சோதனை பயணம் வெற்றி!





சிறீஹரிகோட்டா, ஒக். 23

மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தின் முதல்கட்ட சோதனை ஓட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாக இந்தியா அறிவித்துள்ளது.

ஆளில்லா விண்கலம் ரி.வி-டி1 ஏவூர்தி மூலம் விண்ணில் செலுத்தி, மீண்டும் பத்திரமாக கடலில் இறக்கப்பட்டது என்று அந்த நாடு அறிவித்துள்ளது.

ரஷ்யா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளைத் தொடர்ந்து விண்வெளிக்கு மனிதனை அனுப்பும் முயற்சியில் இந்தியாவும் ஆர்வம் காட்டுகிறது. அந்த நாட்டின் விண்வெளி ஆய்வகமான இஸ்ரோ இந்தத் திட்டத்துக்கு ககன்யான் என்று பெயரிடப்பட்டுள்ளது. 2025ஆம் ஆண்டில் 3 விண்வெளி வீரர்கள் விண்கலம் மூலம் தரையில் இருந்து 400 கி.மீ தூரம் கொண்ட சுற்றுவட்டப் பாதைக்கு அனுப்பப்படவுள்ளனர். அங்கிருந்தபடியே 3 நாட்கள் ஆய்வு மேற்கொண்டு, பின்னர் மீண்டும் அவர்கள் பூமிக்கு பத்திரமாக திரும்ப அழைத்து வருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதன் முதல் கட்டமாக, சிறீஹரிகோட்டாவிலிருந்து நேற்று முன்தினம் ஆளில்லா மாதிரி விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டது. 11.6 கி. மீ உயரம் பயணித்த இந்த விண்கலம் விடுவிக்கப்பட்டது. பின்னர், 16.7 கி. மீ. தூரத்தை எட்டியபின்னர் அது தரையிறக்கப்பட்டது. அப்போது மணிக்கு 1,470 கி.மீவேகத்தில் விண்கலம் பூமியை நோக்கி வந்தது. இதையடுத்து விண்கலத்தில் உள்ள 10 பாராசூட்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் பிரிந்து அதன் வேகம் படிப்படியாக குறைக்கப்பட்டது. இறுதியாக சிறீஹரிகோட்டாவில் இருந்து 10 கி.மீ தொலைவில் உள்ள வங்கக்கடல் பகுதியில் விநாடிக்கு 8 மீற்றர் வேகத்தில் விண்கலம் வெற்றிகரமாக இறக்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக சுமார் 10 நிமிடங்களில் இந்த பணிகள் முடிந்துவிட்டன என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது. (ஐ)

# காஸா நகரத்துக்கு 20 லொறிகளில் நிவாரண பொருள் செல்ல அனுமதி!

காஸா, ஒக். 23

எகிப்தின் ரஃபா எல்லை திறக்கப்பட்டு பலஸ்தீனத்தின் காஸா பகுதிக்கு நேற்று 20 லொறிகளில் நிவாரணப் பொருட்கள் அனுப்பப்பட்டன.

இஸ்ரேல் இராணுவம், ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு இடையிலான போர் நேற்று 16ஆவது நாளாக நீடித்தது. காஸா பகுதி மக்களுக்கு ஆதரவாக லெபனானை சேர்ந்த ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் இஸ்ரேலின் வடக்கு எல்லைப் பகுதிகளை குறிவைத்து தொடர்ந்து ஏவுகணை தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

இதனால், லெபனானின் எல்லையை ஒட்டி வசிக்கும் சுமார் 20 லட்சம் இஸ்ரேலியர்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர். பலஸ்தீனத்தின் காஸா பகுதி, இஸ்ரேல் மற்றும் எகிப்து நாட்டுடன் எல்லையைப் பகிர்ந்துள்ளது. கடந்த 9ஆம் திகதி முதல் காஸா பகுதிக்கான குடிநீர், மின்சாரம், எரிபொருள் விநியோகத்தை இஸ்ரேல் இராணுவம் நிறுத்திவிட்டது. மேலும் காஸா பகுதிக்கு நிவாரண பொருட்களை அனுப்ப இஸ்ரேல் அரசு மறுத்துவிட்டது.



இதைத் தொடர்ந்து சவுதி, கட்டார், சீனா, ரஷ்யா, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் மற்றும் தொண்டு அமைப்புகள் சார்பில் சரக்கு விமானங்கள் மூலம் எகிப்தின் அல் ஆரிஷ் விமான நிலையத்துக்கு சுமார் 3 ஆயிரம் தொன் நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இவை சுமார் 200இற்கும் மேற்பட்ட லொறிகளில் ஏற்றப்பட்டு எகிப்து-காஸாவின் ரஃபா எல்லை பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டன. ஆனால், இஸ்ரேல் போர் விமானங்கள் ரஃபாஎல்லைப் பகுதியில் தொடர் தாக்குதல்களை நடத்தியதால் ரஃபா எல்லையை திறந்து நிவாரணப் பொருட்களை காஸாவுக்குள் கொண்டு செல்ல முடியவில்லை. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் முயற்சியால் நிவாரணப் பொருட்களை காஸாவுக்குள் கொண்டு செல்ல இஸ்ரேல் அரசு அனுமதி அளித்தது.

ஐ. நா. பொதுச்செயலாளர் அந்தோணியோ குத்தேரஸ் நேற்று முன்தினம் எகிப்தின் ரஃபா எல்லைப் பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு நடத்தினார். இதைத் தொடர்ந்து எகிப்தின் ரஃபா எல்லை நேற்று முன்தினம் திறக்கப்பட்டு முதல்கட்டமாக 20 லாரிகளில் நிவாரணப் பொருட்கள் காஸாவுக்கு கொண்டு செல்லப்பட்டன. (ஐ)

# பணயக் கைதிகள் நாடு திரும்ப வேண்டி இஸ்ரேலியர் பிரார்த்தனை!

டெல் அவிவ், ஒக். 23

ஹமாஸ் அமைப்பினரால் பணயக் கைதிகளாக பிடித்து செல்லப்பட்டவர்கள் விரைந்து நாடு திரும்ப வேண்டி இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் ஒன்றுகூடி 'Lighting up the Light' (ஒளியை ஒளிர செய்தல்) என்ற பிரசார இயக்கத்தை மக்கள் முன்னெடுத்தனர்.

வெறுமையான நாற்காலிக்கு முன்பு உள்ள சாப்பாட்டு மேசையின் கண்ணாடி கோப்பையில் மெழுகுவர்த்தியை ஏற்றி மக்கள் தங்கள் கருத்தை வலியுறுத்தினர். அந்த மேசையின் மீது உணவுகளும் வைக்கப்பட்டு இருந்தது. இதில் பணயக் கைதிகளாக பிடித்து செல்லப்பட்ட மக்களின் உறவினர்கள், தன்னார்வலர்கள் என பலர் கலந்து கொண்டனர். அத்துடன், வீதிகளிலும் மக்கள் விளக்குகளை ஏந்தி பணயக் கைதிகள் விரைந்து நாடு திரும்ப வேண்டும் என வலியுறுத்தினர்.

கடந்த 7ஆம் திகதி ஏராளமான இஸ்ரேலியர்கள் மற்றும் வெளிநாட்டினரை ஹமாஸ் தீவிரவாதிகள் சிறைபிடித்து சென்றனர். இஸ்ரேல்மீது நடத்திய திடீர் தாக்குதலை தொடர்ந்து அவர்கள் காஸா பகுதியில் ஹமாஸ் அமைப்பினரால் சிறை வைக்கப்பட்டுள்ளனர். இந்த சூழலில் பணயக் கைதிகளில் சிலர் உயிரிழந்தனர். சிலரை இஸ்ரேல் மீட்டது. இருந்தாலும் மேலும் பலர் பணயக் கைதிகளாக ஹமாஸ் வசமுள்ளனர். (ஐ)

# செலவுக்கு பொருந்தும் வகையில் மின்சார கட்டணத்தை பேணுங்கள்!

## சர்வதேச நாணய நிதியம்

வாஷிங்டன், ஒக். 23

**மின்சாரக் கட்டணத்தை செலவுகளுக்கு பொருந்தும் வகையில் பேண வேண்டியது அவசியமான விடயமாகும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் பிரதித் தலைவர் கத்ஸ்யரினா ஸ்விரிட்சென்கா வலியுறுத்தியுள்ளார்.**

**வாஷிங்டனில் நடைபெற்ற நிகழ்நிலை கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,**

மின்சாரம் தொடர்பான நட்டத்தை ஈடுசெய்வதற்கான துரித நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டியது மிகவும் முக்கியமானது என்பதை நாம் வலியுறுத்த விரும்புகின்றோம்.

அவ்வாறு இல்லாது விட்டால் வரிசெலுத்துபவர்கள், சமூகத்தில் ஆபத்தினை எதிர் நோக்கும் தரப்பினருக்கு அது சுமையாக அமைந்து விடும். சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிதி உதவித் திட்டங்களிலும் அது முக்கிய மானதொரு அங்கமாகும்.

வரிசெலுத்துபவர்களின் மீதான சுமையைக் குறைப்ப



தற்கு வலுவான சமூகப் பாதுகாப் பொன்றே இருக்க வேண்டும்.

மின்சாரத் துறையும் செயல்தி றன் மிக்கதாக அமைய வேண் டும்.

அரசு ரீதியான தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு அமைப்பு ரீதியான மறுசீரமைப் புக்களை மேற்கொள்ள வேண் டும். அதன்மூலம் மத்தியகால, நெடுங்காலத்துக்கு ஏற்றவகை யில் மின்சார செலவுகளை குறைத்துக்கொள்ள வேண்டும்.

இலங்கையின் அதிகாரிகள் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். ஆகவே அப்பணிகள் கிரமமாக வெற்றிபெறும் என்று எதிர்பார்க் கின்றோம் - என்றார். (ஐ)

# மண்சரிவு அபாயத்தால் 28 குடும்பங்கள் வெளியேற்றம்!

கொழும்பு, ஒக். 23

மண் சரிவு அபாயம் காரண மாக மாத்தளை - அப்புத்தளை கீழ் கேல்பன் தோட்டத்தை சேர்ந்த 28 குடும்பங்கள் அங்கி ருந்து வெளியேற்றப்பட்டுள் ளன.

அவர்கள் கேல்பன் தமிழ் வித்தியாலயம் மற்றும் உறவி னர் வீடுகளில் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

அதேநேரம், மண்சரிவு அபா யம் காரணமாக கீழ் கல்கந்த பகுதியிலுள்ள 20 குடும்பங்கள் அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளன.

அவர்களில் பலர் அப்புத் தளை கல்கந்த தமிழ் வித்தியா லயத்தில் தங்கவைக்கப்பட்டுள் ளதாக எமது செய்தி தொடர பாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# 400 கோடி பெறுமதியான ஹெரோயின் சிக்கியது!

## 5 பேர் கைது செய்யப்பட்டனர்

கொழும்பு, ஒக். 23

காலி - தேவேந்திரமுனை யில் உள்ள கடற்பரப்பில் 400 கோடி ரூபாய்க்கும் அதிக பெறு மதியுள்ள ஹெரோயின் போதைப்பொருளை மீன்பிடி படகு மூலம் கடத்தி செல்ல முற்பட்ட 5 பேரை கடற்படை யினர் கைது செய்துள்ளனர். இவர்கள் நேற்று கரைக்கு கொண்டு வரப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்போது போதைப்பொ ருள் மற்றும் சந்தேக நபர்கள் பய ணித்த மீன்படி படகும் கடற்ப டையினரால் கைப்பற்றப்பட் டன.

சந்தேக நபர்களிடமிருந்து 200 கிலோவுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது. (ஐ)

# தேர்தல் சீர்திருத்தத்துக்கு முன்னர் கைவிடப்பட்ட தேர்தல்களை நடத்துக!

## முன்னாள் ஆணையாளர் மகிந்த

கொழும்பு, ஒக். 23

அரசாங்கத்தின் உத்தேச தேர்தல் சீர்திருத்தங்களை வர வேற்பதாக தெரிவித்த தேர்தல் கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய, கைவிடப்பட்டுள்ள தேர்தல் களை நடத்தவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டங்களில் பெரும் மாற்றங்களை மேற்கொள்வ தற்கு ஜனாதிபதி 9 பேர் கொண்ட குழுவை நியமித்துள்ளமை குறித்து கருத்து தெரிவித்துள்ள மகிந்த தேசப்பிரிய, ஆறு மாதங் களில் தனக்கு வழங்கப்பட்டுள்ள பணியை ஆணைக்குழு பூர்த்தி செய்வது மிகவும் கடினம், பல மணித்தியாலங்கள் பல நாட் கள் தொடர்ச்சியாக கலந்துரை யாடல்களில் ஈடுபடவேண்டி யிருக்கும் ஒரு வருட காலத் துக்கு அதிகமாகக்கூட இது நீடிக்கலாம் - என்றார்.

மேலும், சீர்திருத்தங்கள் வர வேற்கத்தக்கவை அவை இந்த காலத்தின் தேவை எனினும் இவற்றுக்கு முன்னர் எங்களுக்கு காணாமல்போன மாகாண சபை தேர்தலும் புதைக்கப்பட்ட உள்ளூராட்சி சபை தேர்தலும் அவசியம் என அவர் குறிப்பிட் டுள்ளார். (ஐ)

# அரசின் 200 வர்த்தக நிறுவனங்கள் வருட அறிக்கை சமர்ப்பிக்கவில்லை

## பாராளுமன்ற குழுவின் தலைவர்

கொழும்பு, ஒக். 23

அரசாங்கத்துக்கு சொந்த மான 200 வர்த்தக நிறுவனங் கள் மற்றும் ஏனைய வியாபார நிறுவனங்கள் கடந்த இரண்டு வருடங்களில் தமது வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத் தில் சமர்ப்பிக்கவில்லை என்று பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தை குறைப்பதற்கான துறைசார் மேற்பார்வை குழு வின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலே பொட தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடி யின் தாக்கத்தை குறைப்பதற் கான துறைசார் மேற்பார்வைக் குழுவானது, பல்வேறு விடயங் கள் சம்பந்தமாக தொடர்ச்சி யாக ஆராய்ந்து வருகின்றது.

குறிப்பாக, பொருளாதார நெருக்கடிகளை தணிப்பதற்கு தடையாக உள்ள காரணங்கள் அல்லது பின்னிலையில் உள்ள விடயங்கள் சம்பந்தமாக தீவிர மான கரிசனைகளைக் கொண் டுள்ளது.

இதனடிப்படையில் அரசாங் கத்துக்கு சொந்தமான 200 வர்த் தக நிறுவனங்கள் மற்றும் ஏனைய வியாபார நிறுவனங் கள் கடந்த இரண்டு வருடங்க ளாக சமர்ப்பிக்கப்படாமை கண்டறியப்பட்டுள்ளது.

அத்தகைய நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகளை எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பாராளுமன் றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு பொது நிறுவனங் கள் திணைக்களத்திற்கு பணிப் புரை விடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# கொழும்பில் துப்பாக்கி சூடு; குழந்தை உட்பட மூவர் காயம்!

கொழும்பு, ஒக். 23

கொழும்பில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் தாய், தந்தை மற்றும் நான்கு மாத குழந்தை என மூவர் காய மடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அளுஹேன்கல்ல - உரகஹ வீதியின் கல்வெஹர பகுதியில் இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த மூவ ரும் பலப்பிட்டி மருத்துவம னையில் சேர்க்கப்பட்டனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக் கான மூவரும் அஹுங்கல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், மோட்டார் சைக்கி ளில் சென்றுகொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவர்களை சுட்டு விட்டு தப்பிச் சென்றனர்.

காயமடைந்தவர்கள் பாதாள உலகக் குழு ஒன்றின் நெருங்கிய உறவினர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# மானை வேட்டையாடிய 3 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, ஒக். 23

மானை வேட்டையாடி வாக னத்தில் கொண்டு சென்ற மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப் பட்டனர்.

ஹற்றன் - கொழும்பு பழைய வீதியில் வைத்தே அவர்கள் மூவரும் கைது செய்யப்பட்ட னர்.

அந்தப் பகுதியில் பொலிஸார் நடத்திய வாகன சோதனை யின்போது, குறித்த வாகனத் தில் மான் ஒன்றை வேட்டை யாடி, அதனை உடலை கொண்டு சென்ற மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

கைதான மூவரும் நேற்று ஹற்றன் நீதிமன்றத்தில் முற்ப டுத்தப்பட்டனர். (ஐ)

# மண்சரிவால் தடைப்பட்டிருந்த கொழும்பு - பதுளை வீதி திறப்பு

கொழும்பு, ஒக். 23

கடும் மழை காரணமாக நேற்று முன்தினம் பிற்பகல் மண் சரிவால் தடைப்பட்ட கொழும்பு - பதுளை பிரதான வீதி, தற் போது வாகனங்கள் செல்வதற்கு ஒரு பாதை மாத்திரம் திறக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறுகிய காலத்தில் பெய்த கடும் மழை காரணமாக பெர கல மற்றும் அப்புத்தளைக்கு இடையிலான வீதிப் பகுதி நேற்று முன்தினம் தடைப்பட் டது.

மேலும் சாலையின் குறுக்கே பெரியளவில் வெள்ளம் ஓடியது. எனினும், மண்சரிவு மேலும் நிகழும் அபாயம் உள்ளதாகல் வீதியை பயன்படுத்தும் சாரதி கள் அவதானமாக செயல்படு மாறு பொலிஸார் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (ஐ)

# தொழுநோயாளர்களை இனங்காண நடவடிக்கை

கொழும்பு, ஒக். 23

நாட்டில் தொழு நோயாளர் களை அடையாளம் காண்பதற் கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருவதாக தேசிய தொழு நோய் தடுப்பு இயக்கம் தெரி வித்துள்ளது.

தேசிய தொழு நோய் தடுப்பு இயக்கத்தின் பணிப்பாளர் விசேட மருத்துவர் பிரசாத் ரணவீர இதனை தெரிவித்துள் ளார்.

அந்தவகையில், ஹெந்தலை யிலுள்ள தேசிய தொழுநோய் தடுப்பு மருத்துவமனையில் வெளிநோயாளர் சிகிச்சை பிரிவு ஒன்றை ஸ்தாபிக்கவுள்ளதாக அவர் கூறியுள்ளார். (ஐ)

## வாழ்க்கை

நிலையை மாற்றியமைக்க வேண்டும். ஜனாதிபதியுடன் எதிர்வரும் வாரம் இடம்பெறவுள்ள பேச்சின்போது இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடவுள்ளோம்.

பொதுஜன பெரமுனவின் முக்கிய அரசியல் தீர்மானங்கள் அடுத்த மாதம் வெளியிடப்படும். தேர்தலுக்கு நாங்கள் தயாராக உள்ளோம். ஜனாதிபதி வேட்பாளர் விவகாரத்தில் கட்சிக்குள் எவ்வித முரண்பாடும் கிடையாது. நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளும் வேட்பாளரை உரிய நேரத்தில் களமிறக்குவோம் - என்றார்.

நேற்றுமுன்தினம் இரத்தினபுரி சென்ற மகிந்த ராஜபக்ஷவை செய்தியாளர்கள் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## முறைதவறும்...

ஜயசூரிய இந்த வரைவை தயாரித்துள்ளார் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்த வாரம் பாராளுமன் றத்தில் இரண்டு சம்பவங்கள் இடம்பெற்றன என்று கூறிய ஜனாதி பதி பாராளுமன்றத்தில் மரியாதை, ஒழுக்கம் என்ற ஒன்று இல்லையா என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், பாராளுமன்றத்தின் ஒழுக்கம் மற்றும் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில் இங்கிலாந்தின் பாராளுமன்ற நிலைமைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி இந்த வரைவு தயாரிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ஐ)

## தனியார்...

மேலும், எரிபொருள் மற்றும் டொலர் கையிருப்பு போன்ற காரணிகள் தொடர் பில் மதிப்பீடுகளை செய்து அதன் அடிப்படையில் தனியார் வாகன இறக்கும தி க்கு அனுமதி வழங்கப்படும். எவ்வாறெ னினும் தற்போதைக்கு தனியார் வாகனங் கள் இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளிக்கும் சாத்தியங்கள் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## உறுதியான...

காணப்படுமென்ற கணிப்புக்கள் எமக்கு உள்ளன. அத்துடன், எதிர்வரும் ஆண்டில் வரவு - செலவு திட்டப் பற்றாக்குறை ஏற்படாமலிருப்பதை உறுதி செய்யவேண்டும் என்பதை சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்த்துள்ளது.

அத்துடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12 சதவீதத்தை விடவும் அதிகமான அரசாங்கத்தினது வருமானம் காணப்படுவதை இலங்கை உறுதி செய்யவேண்டுமென்ற எதிர்பார்ப்பும் காணப்படுகின்றது.

மேலும், இலங்கை அரசாங்கத்தின் வருமான பற்றாக்குறைக்கான இடைவெளி குறைக்கப்படும் பட்சத்தில், எஞ்சியுள்ள இடைவெளியை நிரப்புவதற்கு விரும்பும் கடன் வழங்குநர்களிடம் இருந்து அதனை பெற்றுக்கொள்வதற்கு ஏதுவான நிலைமைகள் ஏற்படும்.

இதேவேளை, இலங்கை கடந்த ஏழு தசாப்தங்களில் கண்டிருக்காத அளவு பொருளாதார நெருக்கடியை சந்தித்திருந்த நிலையில் அதிலிருந்து மீள்வதற்கான சர்வதேச நாணய நிதியம் நீடிக்கப்பட்ட கடன்வசதி திட்டத்தின் கீழ் 290 கோடி டொலர்களை வழங்க இணங்கியுள்ளது.

இந்த நீடிக்கப்பட்ட கடன்வசதியின் இரண்டாவது தவணைக்கான கொடுப்பனவான 33 கோடி டொலர்களை வழங்குவதற்கான ஊழியர்கள் மட்ட இணக்கப்பாட்டை சர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசாங்கத்துடன் எட்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சுகாதார...

கவனத்தை ஈர்ப்பதே இந்த வேலை நிறுத்தத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

களப் பணிகளுக்காக வழங்கப்படும் போக்குவரத்து, மேலதிக கொடுப்பனவை அதிகரிக்கத் தவறியமை முக்கிய பிரச்னைகளில் ஒன்று, இந்த கொடுப்பனவுகள் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, எரிபொருள் விலைகள் மற்றும் மோட்டார் சைக்கிள் பராமரிப்புச் செலவுகள் ஆகியவற்றுக்கு இணையாக இருக்கவில்லை, இதனால் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு நிதி சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

“தங்கள் குறைகளை வெளிப்படுத்த, சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தேர்ந்தெடுத்துள்ளது,” என்று சங்கத்தின் தலைவர் மேலும் கூறினார்.

எவ்வாறாயினும், துறைமுகம், விமான நிலையம், இரத்த வங்கி, மகப்பேறு மருத்துவமனைகள், சிறுவர் மருத்துவமனை, சிறுநீரகப் பிரிவுகள் மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட சுகாதார நிறுவனங்கள் வேலைநிறுத்தம் காரணமாக பாதிக்கப்படாது - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## நிகழ்நிலை...

வெளிப்பாட்டு சுதந்திரம், தகவல் அறியும் உரிமை, அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் போன்றவற்றை மட்டுப்படுத்துவதுடன் அவற்றை மீறுகின்றன. அதுமாத்திரமன்றி அச்சட்டமூலங்கள் நாட்டின் ஜனநாயகம் மற்றும் அடிப்படை உரிமைகளுக்கும் தீவிர அச்சுறுத்தலை தோற்றுவித்துள்ளன.

நிகழ்நிலை காப்பு சட்டமூலமானது குறித்த கருத்து “பொய்யானது” என் றும், அது பகிரப்படுவதைத் தடுக்கவேண்டும் என்றும் தீர்மானம் மேற்கொள்ளும் அதி காரத்தை கொண்டிருக்கும், ஜனாதிபதி யால் நியமிக்கப்படுகின்ற மற்றும் அவரின் சுயவிருப்பின்பேரில் பதவி நீக்கப்படுகின்ற ஆணையாளர்களை உள்ளடக்கியிருக்கும் நிகழ்நிலைக்காப்பு ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான யோசனையை முன்வைக்கின்றது.

குறித்தவொரு கருத்தை நீக்குமாறும், இணையப்பக்கத்தை முடக்குமாறும் தனிநபருக்கோ அல்லது இணைய சேவை வழங்குநருக்கோ அறிவுறுத்துகின்ற அதிகாரம் அந்த ஆணைக்குழுவுக்கு உண்டு. அந்த அறிவுறுத்தல்கள் நிறை வேற்றப்படாத பட்சத்தில் சம்பந்தப் பட்ட நபருக்கு சிறைத்தண்டனை விதிக்கவோ அல்லது அவரிடமிருந்து தண்டப்பணம் அறவிடவோ முடியும்.

எனவே இச்சட்டமூலமானது இணைய ஊடகவியலாளர்கள் மற்றும் செயல்பாட்டாளர்கள், கலைஞர்கள், புத்திஜீவிகள், எழுத்தாளர்கள், தொழிற் சங்கவாதிகள், சிவில் சமூக அமைப்புகள், மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள், தொழிற் துறைசார் கட்ட மைப்புகள் மற்றும் அரசாங்கத்தை விமர்சிக்கின்ற, அரசாங்கத்தின் கொள்கைகளை யும், ஆட்சி நிர்வாகத்தையும் எதிர்க் கின்ற பிரஜைகள் உள்ளிட்ட சகல தரப்பினர் மீதும் அரச ஒடுக்குமுறை பிரயோகிக்கப்படுவதற்கான வாய்ப்பை வழங்கும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய சட்டங்களை உருவாக்கும்போது தகவல் அறியும் உரிமை சட்டவரைவு தயாரிப்பின்போது பின்பற்றப்பட்டதை போன்ற சகல தரப்பினருடனான கலந்துரையாடல் செயன்முறையை அரசாங்கம் பின்பற்ற வேண்டும் - என்றும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## அனைத்து...

வீடுகளை நிர்மாணிப்பது போன்று கல்வியும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

மன்னார் நகரில் கல்வி நன்றாக உள்ளது. ஆனால் மாவட்டத்தின் பிற பகுதிகளில் உள்ள கல்வியில் திருப்தியடைய முடியாது. அத்துடன், இந்தப் பிரதேசத்தில் பெரும் அபிவிருத்தி குறித்தும் திட்டமிட்டுள்ளோம். இந்தியாவுக்கும் மன்னாருக்கும் இடையில் கப்பல் போக்குவரத்து சேவையை ஏற்படுத்துவதற்கான பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனை காங்கேசன்துறையில் ஆரம்பித்தோம். அடுத்து தலைமன்னாரில் ஆரம்பிக்கப்படும். இதேநேரம் இந்தியாவும் இலங்கையும் இணைந்து மின்சார அமைப்பை உருவாக்க திட்டமிட்டுள்ளன. அது இந்த மன்னார் ஊடாகவும் நடக்கிறது என்பதை நான் கூற விரும்புகிறேன்.

இது வெறும் ஆரம்பம்தான். இதன் மூலம் எதிர்காலத்தில் மன்னார் அபிவிருத்தி அடையும். இந்த பகுதியில் பசுமை பொருளாதாரம் மற்றும் பசுமை ஆற்றலுக்கு அதிக சாத்தியம் உள்ளது. இங்கு கிடைக்கும் சூரிய சக்தியை கொண்டு இப்பகுதியை மேம்படுத்த முடியும். புத்தளத்திலிருந்து மன்னார் வரை யாழ். குடாநாட்டின் ஊடாக முல்லைத்தீவு வரை அந்த வாய்ப்புள்ளது.

மன்னாரை சுற்றுலா மையமாக மாற்ற நாங்கள் விரும்புகிறோம். அதே நேரம் மீன்பிடி தொழில் வளர்ச்சி அடையும்போது மன்னாருக்கு புதிய பொருளாதாரம் கிடைக்கும். இன்று நாம் இங்கு நபிகள் நாயகத்தை நினைவு கூருவோம். நபிகள் நாயகம் அவர்கள் கூறிய அதே கோட்பாடுதான் இன்று இலங்கையில் உள்ளது. எனவே இந்த விழாவை தேசிய விழாவாக கருதுகி றோம். அனைத்து மதங்களையும் சமமாக நடத்துவதே எங்கள் கொள்கை. மேலும் அனைவருக்கும் சம உரிமை வழங்குவதே எங்கள் நோக்கம். இங் குள்ள முஸ்லிம் மக்களுக்கு சில பிரச் னைகள் உள்ளன. அரசும் அவற்றை தீர்க் கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என் பதை இங்கு தெரிவிக்க விரும்புகிறேன். நான் திவாலான நாட்டை கைப்பற்றி னேன். அந்த திவால் நிலையில் இருந்து இன்னும் மீண்டு வருகிறோம். எனவே, அந்த பணியை முறையாக மேற்கொள்ள வுள்ளோம்.

நபிகளார் இந்த கோட்பாட்டை பிரசங்கித்த போது, எல்லா கிறிஸ்தவ யூதர்களும் அந்தப் பகுதியில் வாழ்ந்தார்கள். எந்த பிரச்னையும் இல்லை. ஆனால், இன்று பெரிய பிரச்னைகள் உள்ளன. குறிப்பாக, பலஸ்தீன விவகாரம் தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றது. அதற்கு முன்னதாகவே அரசாங்கம் தனது கருத்தை தெரிவித்திருந்தது. பாராளுமன்றத்திலும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. 20 உணவு லொறிகள் காஸாவுக்கு கொண்டு செல்லப்பட்டன என்று கேள்விப்பட்டோம். ஆனால் இது போதுமா என்ற கேள்வி எழுகிறது. இஸ்ரேல்-ஹமாஸ் போர் காரணமாக பலஸ்தீன மக்கள் காஸா பகுதியில் சிக்கித் தவிக்கின்றனர்.

அந்த மக்களின் துயரத்தை நாங்கள் மன்னிக்கவில்லை. அந்த மக்களுக்கு தேவையான உணவுகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். உணவு இஸ்ரேலில் இருந்து மட்டுமல்ல, எகிப்திலிருந்தும் வழங்கப்பட வேண்டும். மேலும் தண்ணீர் கொடுக்க வேண்டும்.

இஸ்ரேல் - ஹமாஸ் சண்டை ஒரு பிரச்னை. ஆனால், இந்தப் போராட்டத்தில் சாதாரண பலஸ்தீன மக்கள் பலியாகிவிடக்கூடாது. எனவே, அதனை தீர்க்க எகிப்து உள்ளிட்ட அரபு நாடுகள் நடவடிக்கை எடுத்து வருகின் றன. மற்ற நாடுகளும் இதற்கு சம்மதம் தெரிவித்துள்ளன. குறிப்பாக, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் இந்தப் பிரச்னையை தீர்த்து அந்தப் பிரதேசங்களில் அமைதியை ஏற்படுத்துவதற்கான செயல்பாடுகளுக்கு எமது பூரண ஆதரவை வழங்குவோம் - என்றார். (ஐ)

## 2024

மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப் படவில்லை.

இவ்வாறு தொடர்ச்சியாக தென்னிலங்கை தலைவர்களில் ஒருவரை தெரிவு செய்வதும், பின்னர் அவர்கள் ஏமாற்றுவதுமான

நிலைமைகள் வரலாறு நெடுகி லும் தொடர் கதையாக உள்ளது. தற்போதைய சூழலில் நாடு பொரு ளாதார நெருக்கடிகளைச் சந்தித்த போதிலும் தமிழ் மக்களின் கோரிக்கைகள் தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டு வருகின்றன. அதேநேரம், திட்டமிட்ட ஆக்கிரமிப்பு நடவடிக் கைகள் உள்ளிட்டவை நீண்டு கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதிகாரங்களைப் பகிரப்போவதாக வும், 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக அமுலாக்கப்போவதாகவும் அறிவித்து சில கலந்துரையாடல்களை செய்திருந்தார். இருப்பினும், அந்தக் கலந்துரையாடல்கள் திருப்திகரமானதாக இருக்கவில்லை என்பதோடு தேரர்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்ட நிலைக்கு சென்றிருக்கின்றது.

ஆகவே, அடுத்த ஆண்டு நவம்பர் மாதமளவில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமாக உள்ளன. அந்தத் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகு மார திஸநாயக்க உள்ளிட்டவர்களும் இன்னும் சிலரும் களமிறங்கவுள்ளனர் என்று தற்போதைக்கு கூறப்பட்டுள்ளது.

இவர்கள் யாரும் தமிழர்களின் விடயத்தில் பகிரங்கமான உடன் பாடுகளை எட்டுவதற்கு தயாராக வில்லை. ஆகக்குறைந்தது அரச மைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தைக்கூட முழுமையாக நடைமுறைப்படுத்தத் தயார் என்ற அறிவிப்பைச் செய்வதற்கு தயாரில்லாதவர்களாக உள்ளனர்.

ஆகவேதான், தமிழ் கட்சிகளுக்கு இடையில் உடன்பாடுகளை எட்டி, தமிழ் மக்களின் வாக்குகள் அனைத் தும் எம்மால் நிறுத்தப்படும் பொது வேட்பாளர் ஒருவருக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற பிரசா ரத்தை முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

இந்த முயற்சியால் எம்மால் நிறுத்தப்படும் வேட்பாளர் ஜனா திபதி அரியாசனத்தில் அமரப் போகின்றார் என்பது அர்த்தமல்ல. மாறாக, தமிழ் மக்கள் தொடர்ச்சி யாக ஏமாற்றப்பட்டு வந்தமையால் அவர்கள் தென்னிலங்கை தலைவர் களை நம்பி வாக்களிக்க தயார் இல்லை என்ற செய்தியை வெளிப்படுத்துவதே இலக்காக உள்ளது.

மேலும், தென்னிலங்கையில் தற்போதுள்ள கருத்துக்கணிப்புக்களின் பிரகாரம், ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் களமிறங்கினால் எந்தவொரு வரும் முதலாம் இரண்டாம் சுற்றில்கூட 51சதவீதமானத்துக்கு அதிகமான வாக்குகளை பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகவே உள்ளன. இதனால் தமிழ் மக்களின் வாக்குகள் தீர்மானிக் கும் நிலையை அடைவதற்கான சாத்தியங்களும் உள்ளன. ஆகவே தான் பொது வேட்பா ளர் ஒருவரை தமிழ் கட்சிகள் இணைந்து நிறுத்துவதென தீர்மானித்துள்ளோம்.

இதற்கு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் இடையே கொள்கையள விலான இணக்கப்பாடுகள் எட்டப் பட்டுள்ளன. அதேநேரம், இலங்கை தமிழரசுக்கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியவற்றுடன் உத்தி யோகபூர்வமான பேச்சுகள் நடத்தப்ப டவுள்ளன - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## தேசிய மீலாதுன் நபிகள் விழா;
# மன்னார் ஊடகவியலாளர்கள் பங்கேற்பதற்கு அனுமதி மறுப்பு!

மன்னார், ஒக். 23

மன்னாரில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆரம்ப மான தேசிய மீலாதுன் நபி விழா வில் கலந்துகொள்ள பிராந்திய ஊடகவியலாளர்களுக்கும் மாவட்ட செயலக ஊடக அலுவலருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. இதனால், அவர்கள் திரும்பிச் செல்ல நேர்ந்தது என்று தெரிய வருகின்றது.

இந்த வருடத்துக்கான தேசிய மீலாதுன் நபி விழாவை இம்முறை மன்னார் மாவட்டத்தில் உள்ள முசலி தேசிய பாடசாலையில் நடத்துவதற்கான ஏற்பாடு முன்னெடுக்கப்பட்டது. வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையில் முழு ஏற்பாடும் செய்யப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் மற்றும் முசலியில் காதர் மஸ்தான் தலைமையில் பல்வேறு கலந்துரையாடல்களும் இடம் பெற்றன. எனினும், காதர் மஸ்தான் தேசிய மீலாதுன் நபி விழா ஏற்பாடுகள் குறித்து மன்னார் மாவட்டத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்காமல் கொழும்பில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், நேற்று காலை 9.30 மணியளவில் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் ஏற்பாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், ஆரம்பமான தேசிய மீலாதுன் நபி விழாவில் கலந்துகொள்ள சென்ற பிராந்திய ஊடகவியலாளர்களுக்கும் மாவட்ட செயலக ஊடக அலுவலருக்கும் அனுமதி வழங்கப்படாமல் அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

ஒரு மதத்தை பிரதிபலிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் பிராந்திய ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படாமை மற்றும் இந்த நிகழ்வின் ஏற்பாட்டாளரான பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் செயல்பாடுகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, காதர் மஸ்தானின் கட்சி சார்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, அரசியல் நிகழ்வு போன்று தேசிய மீலாதுன் நபி விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நிகழ்த்தப்படுவதாகவும் கவலை தெரிவித்துள்ளனர். (ஐ)

# ஐக்கிய தேசிய கட்சியின் செயல்குழுவில் மாற்றம்!

கொழும்பு, ஒக். 23

ஐக்கிய தேசிய கட்சியின் (ஐ. தே. க.) யாப்பில் திருத்தம் கொண்டு வரப்பட்டு, கட்சியில் கட்டமைப்பு ரீதியிலான மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய மாநாட்டில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

இதன்மூலம் செயல்குழுவில் இருந்து கட்சியின் அதிகாரங்கள் புதிய குழுவுக்கு மாற்றப்படும் என கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய திருத்தங்களின் கீழ் செயல்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட உள்ளது. கட்சியில் 100இற்கும் மேற்பட்ட உறுப்பினர்களை கொண்ட ஒரு செயல்குழு இருப்பதால் அதனை மாற்றியமைக்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. பெரிய செயல்குழு தேவையில்லை.

எதிர்காலத்தில் தீர்மானங்களை உடனடியாக எடுக்கும் வகையில் பொறுப்பைக் கொண்ட ஓர் உயர் பதவிக் குழுவை கட்சி கொண்டிருக்கும். டிஜிற்றல் குழுக்களின் அறிமுகத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி டிஜிற்றல் அரசியல் கட்சியாக மாறும். கட்சியின் எந்த உறுப்பினரும் கட்சி வரிசைக்கு ஒப்புதல் பெற்ற பிறகு டிஜிற்றல் குழுக்களை உருவாக்கலாம்.

தொகுதி அளவிலும், மாவட்ட அளவிலும், தேசிய அளவிலும் டிஜிற்றல் குழுக்கள் உருவாக்கப்படலாம். புதிய தலைவர்கள் நீண்ட காலத்திற்கு முன்பே கட்சியை கைப்பற்ற தயாராக இருக்க வேண்டும் - என்றார். (ஐ)

# சுற்றுலாத்துறை வருமானம் 97.5 வீதத்தால் அதிகரிப்பு!

கொழும்பு, ஒக். 23

இந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் நாட்டின் சுற்றுலாத்துறை வருமானம் 97.5 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இது கடந்த ஆண்டை விட அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதன்படி, இவ்வருடத்தில் சுற்றுலாத்துறை வருமானம் 47 ஆயிரத்து 870 கோடி ரூபாய் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் நாட்டின் சுற்றுலாத் துறை வருமானம் 24 ஆயிரத்து 240 கோடி ரூபாயாக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிரசன்ன, சரத் வீரசேகரவுக்கு வீசா மறுத்தது அமெரிக்கா!

கொழும்பு, ஒக். 23

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, சரத் வீரசேகர ஆகியோருக்கு அமெரிக்கா செல்வதற்கான வீசா நிராகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் நடைபெறவுள்ள பாராளுமன்ற துறை கண்காணிப்பு குழுவின் தலைவர்களின் செயலமர்வில் பங்கேற்க ஐக்கிய நாடுகளின் வளர்ச்சி திட்டம் இந்த இருவரையும் பரிந்துரைத்திருந்தது. எனினும், வீசா நிராகரிக்கப்பட்டதையடுத்து இருவரும் அமெரிக்க பயணத்தை இரத்து செய்துள்ளனர் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு எதிரான வழக்கு காரணமாக அமெரிக்க வீசா மறுக்கப்பட்டுள்ளதுடன் யுத்த காலத்தில் சரத் வீரசேகரவின் செயல்பாடுகள் தொடர்பிலான குற்றச்சாட்டுகள் காரணமாக அவரது வீசா நிராகரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பயணத்துக்காக குழுத் தலைவராக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, சுற்றாடல் துறை கண்காணிப்புக் குழுவின் தலைவரான அஜித் மன்னப்பெருமவுக்கு ஒரு மாதகாலம் பாராளுமன்ற சேவை தடை விதிக்கப்பட்டுள்ளதால், அவர் இந்த பயணத்தையும் தவறவிடுவார் என மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்களான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் உதய கம்மன்பில ஆகியோருக்கு எதிராக அமெரிக்கா தடைகளை விதித்துள்ளதாக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

# இலங்கையில் முன்னர் நடந்தவையே இப்போது காஸாவில் நடக்கின்றன

## கஜேந்திரகுமார் எம். பி.

கொழும்பு, ஒக். 23

"இலங்கையில் இருந்து காஸாவில் போர் நிறுத்தத்தைக் கோருவது ஆச்சரியமாக இருக்கின்றது. பயங்கரவாதம் என்ற பெயரில் இனப் படுகொலையே அங்கு நடக்கின்றது. 15 வருடங்களுக்கு முன்னர் இப்போது காஸாவில் நடப்பதை போன்று இலங்கையில் நடந்தது."

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி. தெரிவித்தார்.

"யூதர்களுக்கு அவர்களின் நாட்டை கொடுக்க வேண்டும். அவர்கள் சமாதானமாக வாழ வேண்டும். அதே போன்று பலஸ்தீனத்துக்கும் அநீதி ஏற்பட்டுள்ளது. அங்கே விட்டுக்கொடுப்பு ஏற்பட்டிருந்தது.

இந்த விட்டுக்கொடுப்பில் பலஸ்தீன மக்கள் அதிகமாக அதனை செய்ததை மறுக்க முடியாது. யூதர்களின் நாடு அந்த உடன்படிக்கைகளுக்கு இணங்கி நடந்திருக்க வேண்டும். அவர்களுக்கு சொந்தமான நாடு கிடைக்கும் போது, அந்த நாட்டை சரியான முறையில் நடத்தக் கூடிய முறையிலேயே அது அமைய வேண்டும்.

நாங்கள் பிழையை பிழையென்று நேர்மையாகக்கூற வேண்டும். அதற்கும் மேலாக சென்றுவிட்டது. பயங்கரவாதம் என்ற பெயரில் இனப் படுகொலைகளே நடக்கின்றன. மக்களின் உணவு, மருத்துவம், நீர் வசதிகள் மறுக்கப்படுவதன் நோக்கம் என்ன?

அந்த மக்கள் தொகையை அழிக்கும் செயற்பாடே நடக்கின்றன. அங்குள்ள மக்கள் இலக்கு வைக்கப்படுகின்றனர். மக்களைக் குறிப்பிட்ட இடத்துக்குப் புகலிடம் தேடி செல்லுமாறு கூறும் போது அவர்கள் அவ்வாறு செல்லும் போது அவர்கள் நோக்கி தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

எவ்வாறாயினும் பிரச்னைகளுக்கான அடிப்படைக் காரணங்கள் உள்ளன. அவற்றைக் கண்டறிய வேண்டும். எதிர்கால பலஸ்தீன நாட்டை அழிப்பதாகவே அமையும். 15 வருடங்களுக்கு முன்னர் இப்போது காஸாவில் நடப்பதைப் போன்று இலங்கையில் நடந்தது. வடக்கு, கிழக்கில் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டதுடன் அவற்றின் மீது குண்டுகள் வீசப்பட்டன. மருத்துவமனைகள்மீது குண்டுகள் வீசப்பட்டன. அதே போன்று 15 வருடங்களின் பின்னர் இப்போது நடக்கும் போது அதன் தவறுகளை புரிகின்றனர். இப்போது போர் நிறுத்தம் தொடர்பில் கதைக்கின்றனர். இது தொடர்பில் நாம் ஆச்சரியமடைகின்றோம்.

தமிழ் மக்கள் எந்தத் தரப்பினரைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நாங்கள் இஸ்ரேல் என்ற அரசுக்கு எதிரானவர்கள் அல்லர். அவர்கள் சமாதானமாக வாழ வேண்டும். அதேபோன்றே இலங்கையிலும் சிங்கள மக்களும் சமாதானமாக இருக்க வேண்டும். இதனால் இந்த நாடாளுமன்றத்தில் இருப்பவர்கள் மத்திய கிழக்கில் உள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்து தமக்கென பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்." - என்றார்.(ஐ)

# மின்சார கட்டண உயர்வை மக்கள் தாங்குவது கடினமே!

## ஒத்துக்கொள்கிறது அரசாங்கம்

கொழும்பு, ஒக். 23

தற்போதைய மின்சார கட்டண உயர்வை பொது மக்களால் தாங்குவது கடினம் என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்வதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அகுனகொலபலஸ்ஸ பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "விவசாய அமைச்சின் கீழுள்ள சிறிய அளவிலான விவசாய வர்த்தக பங்கேற்பு வேலைத்திட்டத்தின் ஊடாக அநுராதபுரம், மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் பெரும்போகத்தில் 40 ஆயிரம் ஏக்கர் சோளத்தை பயிரிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உலக வல்லரசுகளுக்கு இடையேயான இந்த போர் சூழல் நம் நாட்டையும் பாதித்துள்ளது. உலகின் பணக்கார நாடுகளுக்கு ஜலதோஷம் ஏற்படும் போது ஏழை நாடுகளுக்கு நிமோனியா ஏற்படும் என ஒரு கதை உண்டு.

அதேபோல் ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் , இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான போரால் இறக்குமதி பொருட்களின் விலை அதிகரிக்கும் அபாயம் உள்ளது. தண்ணீர் கட்டணம் உயரும் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. ஆனால், இந்த நேரத்தில் தண்ணீர் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் இல்லை.



எனவே, அவ்வாறான பிரேரணை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டால், அதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்காது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவதே ஒரே வழி. அரசியல் ஆதாயங்களுக்காக தனித்தனியாக செயல்பட்டால், அது நம்மை மேலும் படுகுழியில் தள்ளத்தான் செய்யும்.

மின் கட்டணத்தை அதிகரிப்பது நல்லதல்ல. ஆனால், நம் நாட்டில் இன்னும் அனல் மின்சாரம் மூலம்தான் அதிக மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த நாட்களில் பல பகுதிகளில் மழை பெய்தாலும், நீர்மின் நிலையங்களில் இன்னும் 100 வீதம் நீர் மின் உற்பத்தி தொடங்கவில்லை.

மின்சார சபை அதிகாரிகளும் சில தியாகங்களைச் செய்ய வேண்டும். எல்லா நேரத்திலும் மக்கள் மட்டுமே தியாகம் செய்ய வேண்டும் என்று கோருவது நியாயமானதல்ல. எனவே இந்த நிலையில் இருந்து விடுபட நாம் அனைவரும் உழைக்க வேண்டும்" என தெரிவித்துள்ளார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# உலகக் கிண்ணத்தில் 5 சதம் அடித்த வோர்ணர்!

*பெங்களூர், ஒக். 23*

உலகக் கிண்ணத்தில் தனது 5ஆவது சதத்தை அவுஸ்திரேலியா வீரர் டேவிட் வோர்ணர் நிறைவு செய்தார்.

பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியிலேயே அவர் சதம் அடித்தார். இந்தப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியில் அதிகபட்சமாக டேவிட் வோர்ணர் 163 ஓட்டங்கள் எடுத்தார்.

இதன் மூலம், உலகக் கோப்பையில் 5 சதங்கள் அடித்துள்ள றிக்கி பொண்டிங், குமார் சங்ககாராவின் சாதனையை வோர்ணர் சமன் செய்துள்ளார்.

இன்னும் ஒரு சதம் அடித்தால் 6 சதங்களுடன் சச்சினின் சாதனையை அவர் சமன் செய்வார். (ஐ)

# 150 விக்கெட்கள் வீழ்த்தியோர் வரிசையில் அடம் ஸம்பா!




*பெங்களூர், ஒக். 23*

அதிவேகமாக ஒருநாள் போட்டிகளில் 150 விக்கெட்கள் வீழ்த்திய சுழல்பந்துவீச்சாளர்கள் பட்டியலில் அவுஸ்திரேலிய வீரர் அடம் ஸம்பா இணைந்துள்ளார்.

பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியிலேயே அவர் இந்த சாதனையை படைத்தார்.

இந்தப் போட்டியில் அவுஸ்திரேலியா தரப்பில் சிறப்பாக பந்துவீசிய ஆடம் ஸம்பா 4 விக்கெட்களை கைப்பற்றி அசத்தினார். இதன்மூலம் ஒருநாள் போட்டிகளில் அதிவேகமாக 150 விக்கெட்கள் எடுத்த சுழல்பந்துவீச்சுளார்கள் பட்டியலிலும் அவர் இணைந்தார். 89 போட்டிகளில் இந்த சாதனையை அவர் படைத்துள்ளார்.

ஒருநாள் போட்டிகளில் அதிவேகமாக 150 விக்கெட்கள் வீழ்த்திய சுழற்பந்துவீச்சாளர்கள்

சாக்லைன் முஸ்டாக் - 78 போட்டிகளில்
ரஷித் கான் - 80 போட்டிகளில்
அஜந்த மெண்டிஸ் - 84 போட்டிகளில்
குல்தீப் யாதவ் - 88 போட்டிகளில்
இம்ரான் தஹீர் - 89 போட்டிகளில்
அடம் ஸம்பா - 89 போட்டிகளில் (ஐ)

# இங்கிலாந்து அணியின் மிகமோசமான தோல்விகள்!

*மும்பை, ஒக். 23*

நடப்பு உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான போட்டியில் 229 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவி உள்ளது இங்கிலாந்து. இது ஒருநாள் கிரிக்கெட்டில் அந்த அணியின் மிக மோசமான தோல்வியாக அமைந்துள்ளது.




இந்தியாவில் நடைபெறும் உலகக் கிண்ணத் தொடரில் நடப்பு சம்பியன் என்ற அந்தஸ்துடன் களம் கண்டது. ஆனாலும், 4 போட்டிகளில் விளையாடி ஒரு போட்டியில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. நியூசிலாந்து, ஆப்கானிஸ்தான் மற்றும் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக தோல்வியை தழுவியுள்ளது. பங்களாதேஷ் அணிக்கு எதிராக மட்டும் வெற்றி பெற்றுள்ளது. ஒருநாள் கிரிக்கெட்டை இருபது- 20 பாணியில் இங்கிலாந்து அணுகுவது இதற்கு காரணம் என வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒருநாள் கிரிக்கெட்டில் இங்கிலாந்து அணியின் மோசமான தோல்வி.

**2023** - மும்பை: தென்னாபிரிக்காவுக்கு எதிராக 229 ஓட்டங்களால் தோல்வி.

**2022** - மெல்பர்ன்: அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 221 ஓட்டங்களால் தோல்வி.

**2018** - கொழும்பு: இலங்கைக்கு எதிராக 219ஓட்டங்களால் தோல்வி

**1994** - கிங்ஸ்டன்: மேற்கு இந்தியத் தீவுகளுக்கு எதிராக 165 ஓட்டங்களால் தோல்வி

**1999** - மெல்பர்ன்: அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 162 ஓட்டங்களால் தோல்வி.




# இலங்கை அணி முதல் வெற்றி!

*லக்னோ, ஒக். 23*

நடப்பு உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் 19ஆவது லீக் போட்டியில் நெதர்லாந்து அணியை 5 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கை வீழ்த்தியது.

லக்னோவில் உள்ள பாரத ரத்னா அடல் பிஹாரி வாஜ்பாய் ஏகானா கிரிக்கெட் ஸ்ரேடியத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற நெதர்லாந்து அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

இதன்படி முதலில் ஆடிய நெதர்லாந்து 49.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 262 ஓட்டங்களை சேர்த்தது. இதில் அதிகபட்சமாக சைப்ரண்ட் ஏங்கல் பிரெக்ட் 70 ஓட்டங்களையும் வான் பீக் 59 ஓட்டங்களையும் சேர்த்து அணிக்கு பலமாக திகழ்ந்தனர்.

இலங்கை தரப்பில் தில்ஷான் மதுஷங்க, ராஜித ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளையும், எம்.தீக்ஷன ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

263 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கைக்கு பதும் நிஸங்க, குசல் பெரேரா அணி தொடக்கம் கொடுத்தது. இதில் குசல் பெரேரா 5 ஓட்டங்களில் கிளம்பினார். அவரைத் தொடர்ந்து வந்த குசல் மெண்டிஸூம் பெரிய அளவில் சோபிக்காமல் 11 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். 11 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட்களை இழந்த இலங்கை 60 ஓட்டங்களை சேர்த்திருந்தது.

பதும் நிஸ்ஸங்கா 54 ஓட்டங்களையும், சரித் அசலங்க 44 ஓட்டங்களையும் சேர்த்துவிட்டு கிளம்பினர். நெதர்லாந்துக்கு எதிராக இணைப்பாட்டமாக அமைத்த சதீர சமரவிக்ரம மற்றும் தனஞ்சய டி சில்வா இணைந்து விளாச அணியின் ஓட்டம் ஏறியது.

தனஞ்சய டி சில்வா 30 ஓட்டங்களில் ஆக, அவருக்கு அடுத்து வந்த துஷான் ஹேமந்த பௌண்ட்ரி அடித்து அணியை வெற்றி பெறச்செய்தார். இதன் மூலம் 5 விக்கெட் வித்தியாசத்தில் நெதர்லாந்தை வீழ்த்தியது இலங்கை. சதீர சமரவிக்ரம 91 ஓட்டங்களிலும், துஷான் 4 ஓட்டங்களிலும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

நெதர்லாந்து அணி தரப்பில் ஆர்யன் டட் 3 விக்கெட்களையும், கொலின் அக்கர்மேன், போல் வான் மீகெரென் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (ஐ)

# இங்கிலாந்து அணிக்கு எதிராக தென்னாபிரிக்கா பெரு வெற்றி!

*மும்பை, ஒக். 23*

உலகக் கிண்ணத் தொடரின் லீக் ஆட்டத்தில் 229 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி தென்னாபிரிக்கா அணி வெற்றி பெற்றுள்ளது.

ஐ. சி. சி. ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடரின் 20ஆவது லீக் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 399 ஓட்டங்களைச் சேர்த்தது. இதில் ஹென்ரிச் கிளாசன் 109 ஓட்டங்களை குவித்து மிரட்டினார். ரீசா ஹென்ட்ரிக்ஸ் 85, மார்கோ ஜான்சன் 75, ரஸ்ஸி வான் டெர் டுசென் 60 ரன்களை குவித்து அணிக்கு பலம் சேர்த்தனர்.

400 என்ற இமாலய இலக்கை விரட்ட களமிறங்கிய இங்கிலாந்து அணியின் தொடக்கம் அவ்வளவு சிறப்பாக இல்லை. ஜொன்னி பெயர்ஸ்ரோ 10 ஓட்டங்களிலும் ஜோ ரூட் 2 ஓட்டங்களிலும் டேவிட் மலன் 6 ஓட்டங்களிலும் பென்ஸ்டோக்ஸ் 5 ஓட்டங்களிலும் ஆட்டமிழக்க 10 ஓவர்களில் 4 விக்கெட்டை இழந்து தடுமாறியது இங்கிலாந்து.

அடுத்து வந்த வீரர்களின் பொறுப்பின்மையால் 12ஆவது ஓவரில் ஜோஸ் பட்லர், ஹாரி புரூக் அடுத்தடுத்து விக்கெட்டை இழந்தனர். தொடர்ந்து அடில் ரஷித் 10 ஓட்டங்கள், டேவிட் வில்லே 12 ஆட்டமிழக்க 18ஆவது ஓவரில் 8 விக்கெட்களை இழந்த இங்கிலாந்து 118 ஓட்டங்களை மட்டுமே சேர்த்தது. மார்க் வூட் களமிறங்கி 5 சிக்ஸர்களை விளாசி அதிரடி காட்டியது மட்டும் ஆறுதல். கஸ் அட்கின்சன் 35 ஓட்டங்களில் வெளியேற, அடுத்து வந்த ரீஸ் டோப்லி காயத்தால் ஆடாமல் வெளியேறினார். இதையடுத்து 22 ஓவர்களிலேயே 170 ஓட்டங்களுடன் சுருண்டது இங்கிலாந்து. இதனால் 229ஓட்டங்களால் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்க அணி தரப்பில், ஜெரால்ட் கோட்ஸி 3 விக்கெட்களையும், மார்கோ ஜான்சன், லுங்கி நிகிடி ஆகியோர் தலா 2 விக்கெட்களையும், கேசவ் மகாராஜ், ரபாடா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.



# சர்வதேச நாணய நிதியத்தின் ஆளுகை மறுசீரமைப்பு அறிக்கையும் அதன் பரிந்துரைகளும்: சில அவதானிப்புகள்



கலாநிதி. இரா.ரமேஷ்
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்)

**அறிமுகம்**

தற்போது இலங்கையில் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி தொடர்பாக பரந்த கலந்துரையாடல் நாடாளுமன்றத்திலும், அரசியல் பரப்பிலும், சிவில் சமூக மட்டத்திலும் இடம்பெற்று வருவதை நாம் காணக் கூடியதாக உள்ளது. சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்குவதற்கு பல்வேறு நிபந்தனைகளை விதித்திருப்பதனை பார்க்க முடிகிறது. அது ஐஎம்.எவ் இன் பொதுவான நடைமுறையும் கூட. அந்த வகையில் கடந்த செப்டம்பர் மாதம் 30ஆம் திகதி சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் ஆளுகை செயன்முறையில் உள்ள குறைபாடுகளை ஆழமாக மதிப்பீடு செய்து, 139 பக்கங்களைக் கொண்ட ஒரு விரிவான அறிக்கையை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் இலங்கையின் ஆளுகைக் கட்டமைப்பில் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பிரதான 16 மறுசீரமைப்புகள் மற்றும் மாற்றங்கள் குறித்து விரிவான பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. இந்தப்பரிந்துரைகள் ஒவ்வொன்றும் இலங்கையில் ஆளுகை செயன்முறையில் உள்ள குறைபாடுகள், அதிகார துஷ்பிரயோகம், நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள ஊழல் மோசடி, ஊழல் கலாச்சாரம், வெளிப்படைத்தன்மை இன்மை, பொறுப்புக்கூறல் தொடர்பான பிரச்சனைகளை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டவை என்பதில் தவறில்லை. ஒட்டுமொத்த அறிக்கையிலும் தொடர்ச்சியாக அழுத்தி வலியுறுத்தப்படும் விடயம் யாதெனில் இலங்கையில் ஊழலற்ற ஒரு ஆளுகை செயன் முறையைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதாகும். ஆளுகை செயன்முறையில் உள்ள குறைபாடுகளை மிக விரைவில் களைய வேண்டும் என்பதை அவர்கள் வலியு றுத்துவதுடன், அது பொருளாதார அபிவிருத்தி, வெளிநாட்டு முதலீடு, ஒழுக்கமுடைய பொதுநிர்வாகம் மற்றும் பொறுப்புக்கூறும் ஆளுகைக்கு அவசியம் எனப்படு கின்றது. அவர்கள் முன்வைத்துள்ள 16 பரிந்துரைகளை யும் நடைமுறைப்படுத்த வேறுப்பட்ட கால அவகாசத்தையும் வழங்கியிருப்பது இதில் இன்னுமொரு சிறப்பம்சமா கக் காணப்படுகிறது.




ஆகவே, இலங்கையின் ஆட்சி செயன்முறையில் காணப்படும் தோல்வியை சரிசெய்ய வேண்டுமாக இருந்தால், அதில் இருந்து இலங்கை நாட்டை மீட்டெடுக்க வேண்டுமாயின் இந்த சவால்மிக்கபரிசோதனையில் இலங்கை ஈடுபட வேண்டும் என்பது இங்கு வெளிப் படுகின்றது. இந்த கசப்பான மாத்திரையினை இலங்கை விரும்பியோ விரும்பாமலோ உட்கொள்ள வேண்டும் என்பது இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாகும். ஆகவே, இந்த நிபந்தனைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற தவறுமாக இருந்தால் மூன்றாவது தவணை கடன் உதவி யினை சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெற்றுக் கொள்வது இயலாத காரியமாக மாறக்கூடிய வாய்ப்பு ஏற்படலாம். இரண்டாவது தவணைக் கடன் ஜனவரி மாதம் அளவில் கிடைக்கும் என எதிர்ப்பார்க்கலாம். அதில் பெரியளவிலான சவால்கள் இருப்பதாக தென்படவில்லை. இந்த நாட்டில் 1978ஆம் ஆண்டு அரசியல மைப்பு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் ஆளுகை செயன்முறையில் காணப்படும் பிரதான குறைபாடுகளில் ஒன்று தான் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதி பதியினுடைய கைகளில் அதிகாரத்தை குவித்து நாடா ளுமன்றத்தையும், நீதிமன்றத்தையும் கேலிக்கூத்தாக மாற்றியமையாகும். இது இலங்கையில் நிறைவேற்று சர்வாதிகார ஆட்சியினை ஏற்படுத்தியது எனலாம். இதனை ஆளுகை செயன்முறையின் ஒரு பிரதான பிரச்னையாக நாம் காணலாம். நாம் இன்று அனுபவிக்கும் பொருளாதார, அரசியல் நெருக்கடிகள் அனைத்திற்கும் ஆளுகை செயன்முறையில் காணப்படுகின்ற குறைபாடு கள் அல்லது ஆளுகை தோல்வி அல்லது தீங்கான ஆளுகை பிரதான காரணியாக உள்ளது. அரகலயப் போராட்டக்காரர்கள் தொடச்சியாக வலியுறுத்தியது ஆளுகை மறுசீரமைப்பாகும - அதனை அவர்கள் முறைமை மாற்றம் (System Change) என்ற பெயரில் கோரினார்கள். அந்தவகையில் இக்கட்டுரையானது ஐஎம்எவ் இன் ஆளுமை மறுசீரமைப்பு பரிந்துரைகள் தொடர்பான ஒரு சாரம்சத்தினை வழங்குவதனை நோக்காகக் கொண்டு அமைந்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் 16 பரிந்துரைகளை இலங்கையை மீட்டெடுப்பதற்கும், முன்னோக்கி கொண்டு செல்வதற்குமான ஒரு நிழற்பட அச்சாகப் பார்க்க முடியும். இந்தப் பரிந்துரைகளை இலங்கை சரியான முறையில் பின்பற்றுகின்ற பட்சத்தில் ஆட்சிமுறை செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறலை மேம்படுத்த முடியும் என்பது சர்வதேச நாணய நிதியத்தின் நம்பிக்கையாக காணப்படுகின்ற அதே வேளை இலங்கையில் நல்லாட்சியை விரும்பும் அனைத்து தரப்பினரும் இதனை விரும்புவர் என்றும் எதிர்பார்க்கலாம். ஊழலற்ற இலங்கையினை கட்டியெழுப்ப எத்தனிக்கும் எவரும் சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை எதிர்க்க மாட்டார்கள். ஏனென்றால், இவை நாட்டிற்கு மிக அவசியமானவை. இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து இன்றுவரையில் ஆளுகை செயன்முறையில் நாம் நான்கு பிரதான குறைபாடுகளை அவதானிக்கலாம். அவை முறையே (1) ஏற்கனவே குறிப்பிட்டதன்படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை, (2). ஊழல் மோசடி, (3). இனவாதம் அல்லது ஆட்சிமுறை செயற்பாட்டில் இனத்துவத்துவ மேலாதிக்கம், (4). அரசியல் செயற்பாடுகளில் பௌத்த மதத்தின் மேலோங்கிய செல்வாக்கு. இம்மூன்று காரணிகளும் இலங்கையின் தற்போதைய வங்குரோத்து நிலைமைக்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது என்பதனை எவரும் மறுதலிக்க முடியாது. ஆகவே, இன்று பெரியளவிலான மறுசீரமைப்புகள் ஆளுகை மற்றும் இலங்கையின் அரசியல் முறைமையில் அவசியமாக உள்ளது. இப்பின்புலத்தில் நாம் சர்வதேச நாணய நிதியத்தின் 16 பரிந்துரைகளையும் அவதானிப்பது அவசியமாகும்.

**ஐஎம்எவ் முன்வைத்துள்ள பரிந்துரைகளை அமுல்படுத்துவதனை கிடப்பில் போட்டுவிட்டு அரசாங்கம் தொடர்ந்தும் மனித உரிமைகளையும், ஜனநாயக போராட்டத்திற்கான பிரஜைகளின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் நசுக்கும் சட்டங்களை கொண்டுவருமாக இருந்தால், அது மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும்.**

## இலஞ்ச மற்றும் ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மை

இலங்கையின் இலஞ்ச மற்றும் ஊழல் எதிரப்பு ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமிப்பதற்கு ஓர் ஆலோசனைக் குழுவை 2023 நவம்பர் மாதத்திற்குள் நியமிக்க வேண்டும் என்று முதலாவது பரிந்துரையை முன்வைத்துள்ளது. இதனை நவம்பர் மாதத்தில் நிறைவு செய்ய வேண்டும். இலஞ்ச ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவிற்கு கடந்த காலங்களில் ஜனாதிபதிக்கு வேண்டப்பட்டவர்களை, விசுவாசமானவர்களை நியமித்த போக்கை அவதானித்துள்ளளோம். நிறைவேற்று அதிகாரத்தினைப் பயன்படுத்தி தமக்கு அரசியல் விசுவாசத்தினை காட்டும் நபர்களை கடந்த காலங்களில் மாறி மாறி பதவிக்கு வந்த ஆட்சியாளர்கள் நியமித்தார்கள். இதுவும் இந்த நாட்டில் ஆளுகை செயன்முறையின் பிரதான வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. ஆகவேதான் தகுதியான ஆலோசனைக் குழுவொன்றை நியமித்து, அவர்கள் வழங்குகின்ற ஆலோசனையின் பெயரில் இலஞ்ச மற்றும் ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவிற்கான 5 உறுப்பினர்களை நியமிக்க வேண்டும் என்று இவ்வறிக்கை குறிப்பி டுகின்றது. இந்த காரியத்தினை அரசியலமைப்பு பேரவை முன்னெடுக்க வேண்டும்.

அதனூடாக ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவின் நியமன விடயத்தில் அரசியல் தலையீடுகளை தவிர்ப்பது, நேர்மையாக, வினைத்திறன்மிக்க வகையில் இந்த ஆணைக்குழு செயற்படுவதை உறுதிப்படுத்துவது, ஊழ லுக்கு எதிராக செயற்படுவதற்கு அவகாசத்தை ஏற்படுத் துவது என்பன எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டில் இலஞ்ச ஊழலுக்கு எதிராகச் செயற்படுகின்ற பிரதான நிறுவனமாக ஒவ்வொரு நாட்டிலும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு காணப்படுகிறது. ஆனால், இலங்கை யைப் பொறுத்தவரையில் இவ் ஆணைக்குழு நிறுவன ரீதி யான ஒரு கட்டமைப்பினைக் கொண்டிருந்தாலும் இதன் அதிகாரங்கள், கடமைகள், வளங்கள் தொடர்பாக பாரிய பிரச்னைகளும், மட்டுப்பாடுகளும் காணப்படுகிறது. தொடர்ச்சியான அரசியல் அழுத்தம், அரசியல் தலையீடு, 20ஆவது சீர்திருத்தங்களின் கீழ் இவ் ஆணைக் குழுவின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை மற்றும் அதன் நிலையினை வலு விழக்கச் செய்தமை போன்றன இலஞ்ச ஊழல் ஆட்சிமுறைச் செயற்பாடுகளில் பரந்தளவில் இடம்பெறுவதற்கு அல்லது ஒரு கலாசாரமாக மாறுவதற்கு காரணமாக அமைந்துவிட்டது. ஆகவே, இந்த நிலைமையை மறுசீரமைப்பதற்கு இந்த ஆணைக் குழுவின் சுயாதீன தன்மையைப் பாதுகாக்க வேண்டும். இந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமிக்கும் போது ஒரு சுயாதீன ஆலோசனைக் குழுவை நியமிக்க வேண்டிய தேவை காணப்படுகிறது. டிரான்ஸ் பேரன்சி நிறுவனம் 2017ஆம் ஆண்டு ஆசியாவில் உள்ள ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுக்களின் செயற்றிறன் தொடர்பாக மதிப்பீடு ஒன்றினை செய்து அறிக்கை வெளியிட்டது. இதன்படி இலங்கையின் இலஞ்ச ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவிற்கு

(மறு பக்கம் பார்க்க)

# ஐஎம்எவ் இன் 16 பரிந்துரைகள் என்ன?

ஒதுக் கப்பட்டுள்ள மொத்த பணியாளர் தொகை 802 ஆகும். அதில் 353 பேர் மாத்திரமே தற்போது சேவையில் இருப்பதாகவும் சுமார் 449 பதவி வெற்றிடங்கள் பல ஆண்டு களாக நிரப்பப்படவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவி வெற்றிடங்கள் இக்கட்டுரை எழுதும் தருணம்வரையில் முழுமையாக நிரப்பப்படவில்லை, இன்னும் 300 பதவி வெற்றிடங்கள் இருப்பதனை கட்டுரையாசிரிருக்கு கிடைத்த தகவல்கள் உறுதிசெய்கின்றன. இது அரசாங்கம் இலஞ்ச ஊழலுக்கு எதிராக போராடுவதில் காட்டுகின்ற அர்ப்பணிப்பின் அளவினை வெளிப்ப டுத்துகின்றது.

**அரசியல்வாதிகள் சொத்துக்களை பிரகடனப்படுத்தல்**

இரண்டாவது பரிந்துரை 2024 ஆண்டு ஜூலை மாதமாகும்போது சகல அரசியல்வாதிகளும் தமது சொத்துக்களைப் பிரகடனப்படுத்தியிருக்க வேண்டும் என்பதாகும். நாடாளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களும் தமது சொத்துக்களைப் பிரகடனப்படுத்த வேண்டும் என்பதே இங்கு குறிப்பிடப்படுகின்றது. இது வெளிப்படைத்தன்மைக்கும், பொறுப்புக்கூறலுக்கும் பெரிதும் அவசியமாகும். இதுவரைக்கும் நாடாளுமன்றத்தில் உள்ள உறுப்பினர்களில் 12 பேர் மாத்திரமே தமது சொத்துகளை பகிரங்கமாக வெளிப்படுத்தி உள்ளனர். அது மட்டுமல்லாது சர்வதேச நாணய நிதியம் வெளிப்படுத்தும் இன்னுமொரு விடயம் அரசியல்வாதிகள் சொத்துக்களைப் பிரகடனப்படுத்திய பின்னர் அவற்றை பொதுமக்கள் அணுகக்கூடிய ஒரு இணையத்தளத்தில் காட்சிப்படுத்த வேண்டும். பொதுமக்கள் அவற்றைப் பார்ப்பதற்கான வசதியை, உரிமையை வழங்க வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றது. இது தனிப்பட்ட நபர்களை அடிப்படையாகக் கொண்ட முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அவசியமாகும்.

ஆட்சி செயன்முறையில் நேர்மைத் தன்மையும், வெளிப்படைத்தன்மையும், பொறுப்புகூறலையும் கொண்டுவருவதற்கு சொத்துகளைப் பிரகடனப்படுத்துவது அவசியமாக உள்ளது. சொத்துகளைப் பிரகடனப்படுத்துவதை இலங்கையின் பல அரசியல்வாதிகள் தொடர்ந்தும் தவிர்த்துக்கொண்டு வருகிறார்கள். இதன் காரணமாக அவர்கள் எவ்வாறு சொத்துக்களைச் சேர்த்தார்கள், எங்கிருந்து அவ்வளவு சொத்துக்களைச் சேர்த்தார்கள், அதனை என்ன செய்கிறார்கள், எங்கு அதனை முதலீடு செய்கிறார்கள், எந்தந்த நாடுகளில் தமது சொத்துக்களைப் பதுக்கி வைத்திருக்கிறார்கள் போன்ற விடயங்களை பொதுமக்கள் அறிய முடியாதுள்ளனர். இது இன்னுமொரு பக்கத்தில் தேர்தல் காலத்தில் மோசமான ஊழல் மோசடியையும், பணத்தையும் பொருளையும் கொடுத்து வாக்குகளை விலைக்கு வாங்கும் கலாசாரத்தையும் இலங்கையில் உருவாக்கி இருப்பதை நாம் பார்க்க முடியும். இந்த மோசமான நிலையை முறியடிக்க வேண்டுமாக இருந்தால் அரசியல்வாதிகள் சொத்துக்களைப் பகிரங்கப்படுத்துவது அவசியமாகும். அது மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் அவர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமையும்கூட.

**கறுப்புப்பணத்தின் புழக்கத்தினை தடைசெய்தல்**

மூன்றாவது பரிந்துரை சட்டத்துக்குப் புறம்பான பணத்தினை (கறுப்புப்பணம்) தூய்தாக்கல் செய்வதனை தடுப்பதற்கு குற்றவியல் சட்டத்தை இறுக்கமாக்க வேண்டும். அதன் ஊடாக கருப்புப் பணத்தினை துய்தாக்குவதனைத் தடுக்கவேண்டும் எனப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் ஊழலுக்கு எதிரான சமவாயம் மற்றும் சர்வதேச நிதி நடவடிக்கை பணிக்குழுவின் தராதரங்களுக்கு ஏற்ப குற்றவியல் சட்டங்களை இருக்கமாக்க (திருத்த) வேண்டும் என குறிப்பிடுகின்றது. சர்வதேச நிதி நடவடிக்கை பணிக்குழு என்பது சட்டவிரோத பணப்புழக்கம் (கடத்தல்) மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதி அளிக்கப்படுவதனை தடுப்பதற்கான அரசுகளிக்கிடையிலான சர்வதேச கண்காணிப்பு அமைப்பாகும். அதன் தலைமையகம் பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரத்தில் அமைந்துள்ளது. சட்டவிரோத பண பறிமாற்றத்தினை மற்றும் துய்தாக்கப்படுவதனைத் தடுப்பதற்கு இவ்வமைப்பு பல தராதரங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

இலங்கையில் நிதி தூய்தாக்குதல் மிகவும் பிரச்னைக்குரிய விடயமாகக் காணப்படுகிறது. அரசியல்வாதிகள் கருப்புப் பணத்தினை இலங்கையில் முதலிடுமாறு கடந்தகாலங்களில் பகிரங்கமாக அறிவித்தார்கள். இலங்கைக்கு நேர்மையான முதலீட்டாளர்கள் வருகைத்தராமைக்கு இது பிரதான காரணம் என்பதனை அரசியல்வாதிகள் இன்னும் உணரவில்லை போல் தெரிகிறது. கறுப்புப் பணத்தை வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்குக் கொண்டுவர முடியும் என்ற ஒரு சூழலை பசில் ராஜபக்ஷ தரப்பினர் இந்த நாட்டிலே உருவாக்கினார்கள். இது சர்வதேச சட்ட பொறிமுறைகளுக்கு முரணான ஒரு விடயம். ஆகவேதான் சர்வதேச நாணய நிதியம் 2024 ஏப்ரல் மாதமாகும் போது ஒரு உறுதியான சட்டத்தை கொண்டுவந்து நிதி தூய்தாக்குதலை ஒரு குற்றமாக நிறைவேற்ற வேண்டும், அதில் ஈடுபடுவோரை தண்டிக்க வேண்டும், அந்தச் செயற்பாட்டை நிறுத்த வேண்டும், சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ப அந்த காரியத்தை இலங்கை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகின்றது. 2016ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பணம் துய்தாக்கலுக்கு எதிரான சட்டமானது பல குறைப்பாடுகளைக் கொண்டுள்ளது. அதனால் சட்டவிரோத பணப்புழக்கத்தினை நிறுத்த முடியாமல் உள்ளதாக இவ்வறிக்கை குறிப்பிடுகின்றது.

இந்தியாவில் மோடி ஆட்சிக்கு வந்த பின்னர் நிதி தூய்தாக்குதல் பெரியளவில் இந்தியாவில் நிறுத்தப்பட்டது. இதற்குக் காரணம் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டமையாகும். இன்று பெரும் செல்வந்தர்களும், அதிகாரம் படைத்தவர்களும் சட்டவிரோத பணப்புழக்கத்தில் ஈடுபடுவதனை காண முடியும். இச்செயல் வெளிநாட்டு முதலீட்டாளர்களை அதையரியப்படுத்தும். அவநம்பிக்கையினை ஏற்படுத்தும். இத்தகைய செயற்பாடுகள் இலங்கையில் வியாபாரம் செய்வதற்கான உகந்த சூழ்நிலையினை ஒருபோதும் உருவாக்கப் போவதில்லை. வியாபாரம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு மிகவும் கடினமான ஒழுங்கு விதிகள், சட்டங்கள் மற்றும் இலஞ்ச கலாசாரத்தினைக் கொண்டுள்ள நாடுகளின் பட்டியலிள் இலங்கை முன்னணியில் உள்ளது என்பதனையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். உலக வங்கியின் 2023ஆம் ஆண்டுக்கான எளிதாக வணிகம் செய்யக்கூடிய நாடுகளின் தரப்படுத்தலில் 190 நாடுகளில் இலங்கை 99ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலைமையில் இலங்கைக்கு வெளிநாட்டு முதலீட்டுகளைக் கொண்டுவருவது வெறும் பகல் கனவாகவே அமையும்.

**தேசியக் கணக்காய்வு சட்டத்தினை திருத்துதல்**

நான்காவது பரிந்துரை தேசிய கணக்காய்வு சட்டத்தை திருத்த வேண்டும் என்பதாகும். தேசிய கணக்காய்வு சட்டத்தில் பல குறைபாடுகள் காணப்படுகிறன. தேசிய கணக்காய்வு சட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் தான் அரச நிறுவனங்களில் ஊழல், மோசடிகள் பல்கிப் பெருகுவதற்கு காரணமாக இருக்கின்ற அதேவேளை, அரச நிறுவனங்களில் பொது நிதியைப் பயன்படுத்துவதில் நேர்மைத்தன்மை, பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை இல்லாமல் போவதற்கும் காரணமாக உள்ளது. சில அரச நிறுவனங்களில் கடந்தகாலங்களில் கோடிக்கணக்கான பணம் செலவிடப்பட்டமைக்கு எந்த சான்றுகளும் இல்லை. ஒப்பந்தங்களை வழங்கும் போது, பெரும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்கின்ற போது ஸ்தாபிக்கப்பட்ட நிதி ஒழுங்கு முறைகளுக்கு ஏற்ப பொது நிதி செலவிடப்படுவதில்லை. இது அரசியல் மற்றும் நிர்வாக ஊழலுக்கு பெரிய அளவில் வழிவகுக்கின்றது. ஆகவேதான் தேசிய கணக்காய்வு சட்டம் திருத்தப்பட்டு, அதில் புதிய ஏற்பாடுகள் கொண்டுவரப்பட்டு கணக்காய்வினை இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. கணக்காய்வு இறுக்கமாக இடம்பெறுகின்ற பொழுது பொறுப்புகூறலும், வெளிப்படைத்தன்மையும் ஏற்படும். மறுபக்கமாக பிரஜைகளுக்கு அரசாங்க நிறுவனங்கள் மீது நம்பிக்கை ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகம் இருக்கின்றது. அத்துடன், பொது நிதியினை பயன்படுத்தல் தொடர்பாக சரியான மேற்பார்வையினை செய்ய தவறும் அதிகாரிகள் மற்றும் பிரதம கணக்காளர்கள் (அமைச்சின் செயலாளர் உட்பட) ஆகியோரிடம் கடமையை செய்யத் தவறியமைக்காக அதிக பணத்தினை வசூலிக்க வேண்டும் என பரிந்துரை செய்கின்றது.

ஐந்தாவது பரிந்துரை வியாபார செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல் ஆகும். குறிப்பாக, கம்பனி சட்டத்தின் படி வணிக செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு தமக்குக் கிடைக்கும் பயன்கள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு அவசியமான ஒழுங்குவிதிகளை இருதி வடிவப்படுத்தி அதனை அமுல்படுத்த வேண்டும். அத்துடன், உரித்துடைமையின் பயன்களை பொதுவில் காட்சிப்படுத்த 2024 ஏப்ரல் மாதம் ஆகும் போது ஒரு பதிவேட்டினை ஸ்தாபித்தல் வேண்டும்.

**பொது கொள்முதல் தொடர்பாகப் புதிய சட்டம் ஒன்றினை இயற்றுதல்**

இலங்கைக்கு மிக மிக முக்கியமானது ஆறாவது பரிந்துரையாகும். இது நீண்டகாலமாக பேசப்பட்டு வரும் விடயமும்கூட. இலங்கையில் பொது நிறுவனங்களில் ஊழல் மோசடிகள் பாரிய அளவில் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக அமைவது கொள்முதல் தொடர்பான சட்டமொன்று இல்லாமல் இருப்பதாகும். இலங்கையில் அரச நிறுவனங்கள் கொள்முதல் செய்கின்றபோது சில வழிகாட்டல்கள் மற்றும் கொள்கைகள் இருக்கின்றனவே தவிர சட்டமொன்று இன்னும் நாடாளுமன்றத்தால் உருவாக்கப்படவில்லை. இந்தச் சட்டம் உருவாக்கப்படாமைக்கு காரணமும் அது ஊழல் மோசடிகளை தடுக்கும் என்பதாலாகும். ஆகவே, நாடாளுமன்றத்திலுள்ள பெரும்பாலான அரசியல்வாதிகள் இத்தகைய சட்டத்தை நிறைவேற்ற தொடர்ந்தும் விருப்பம் காட்டவில்லை. உலகில் பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஊழல் தொடர்பான ஆராய்ச்சிகளில் தொடர்ச்சியாக கண்டுபிடிக்கப்பட்ட ஒரு விடயம் யாதெனில் அரச நிறுவனங்களில் கொள்முதல் அல்லது பெறுகை தொடர்பான விடயங்களில் காணப்படும் தவறான செயற்பாடுகளே ஊழல் மோசடிக்கான கதவை திறந்து விடுகின்றது என்பதாகும். 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக கொள்முதல் ஆணைக்குழுவொன்று கொண்டுவரப்பட்டபோதும், அது தொடர்பான சட்டம் ஒன்றினைக் கொண்டுவந்து கொள்முதல் செயன்முறையில் நீண்டகாலமாகக் காணப்படும் ஊழலைத் தடுப்பதற்கு எந்த ஒரு அரசாங்கமும் முயற்சிக்கவில்லை என்பது ஊழலை ஒழிப்பதில் இலங்கையின் அரசியல் தலைமைகள் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பினைக் காட்டுகின்றது.

ஆகவேதான் 2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆகின்ற பொழுது கொள்முதல் தொடர்பான சட்டத்தினை இலங்கை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என்ற பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது. ஊழலை கட்டுப்படுத்த இச்சட்டம் பெரிதும் அவசியமாகும். பொதுக் கொள்முதல் தொடர்பாக பொதுமக்களுக்கு தகவல்களை வழங்க வேண்டும். பாரிய அளவிலான கொள்முதல் செயற்பாடுகள் வெளிப்படைத்தன்மையுடன் இடம்பெற வேண்டும் என்று குறிப்பிடப்படுகின்றது. சீனிக் கொள்முதலாக இருக்கலாம் அல்லது அண்மைக்காலத்தில் சுகாதார அமைச்சு கொள்வனவு செய்த அவசர உபகரணங்கள் மற்றும் மருந்துப் பொருட்களாக இருக்கலாம், இவையனைத்தும் பாரிய ஊழலுடன் தொடர்புடையவை என்பதனை ஊடகங்கள் தொடர்ச்சியாக வெளிப்படுத்தியதனை இலகுவில் மறந்துவிட முடியாது.

**விலைமனு கோரல் செயன்முறையில் போட்டித் தன்மையினை ஊக்குவித்தல்**

அரசாங்கம் விலைமனு ஊடாக கொள்முதல் ஒப்பந்தங்களை வழங்கும்போது போட்டித்தன்மையினை ஊக்குவிக்க வேண்டும் என்பது ஏழாவது பரிந்துரையாகும். போட்டித்தன்மையின் அடிப்படையில் இவை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், அது தொடர்பான முன்னேற்ற அறிக்கையினை பொதுமக்கள் பார்க்கக்கூடிய ஒரு இணையத்தளத்தில் பிரசுரிக்க வேண்டும் என்கிறது. இதனை 2024 டிசம்பர் மாதம் ஆகும்போது மேற்கொள்ள வேண்டும். காரணம், 2022ஆம் ஆண்டு சுமார் 10 முக்கியமான அரச நிறுவனங்களில் போட்டித்தன்மை அடிப்படையில் விலை மனு கோரல் மற்றும் ஒப்பந்தங்களை வழங்கல் இடம்பெறவில்லை. இந்நிறுவனங்கள் அரசியல் மற்றும் தனிப்பட்ட உறவின் அடிப்படையில் ஒப்ந்தங்களை வழங்கியுள்ளன. ஆகவே, பாரிய திட்டங்களுக்காக ஒப்பந்தங்களை கோருகின்ற போது அது போட்டித்தன்மை மிகுந்ததாக இருக்க வேண்டும். போட்டித் தன்மை இல்லாவிட்டால் அங்கு ஊழல் மோசடிகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. போட்டித்தன்மை திட்டங்களின் தரம், பணத்திற்கான பெருமதி, வினைத்திறன் மற்றும் சிறந்த கண்காணிப்பு என்பவற்றுக்கு வழிசெய்யும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எட்டாவது பரிந்துரை ஒரு பில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட பொது கொள்முதல் தொடர்பான சகல ஒப்பந்தங்களையும் பொதுமக்களுடைய பாவனைக்காக காட்சிப்படுத்த வேண்டும். அது தொடர்பான தகவல்களை (ஒப்பந்தத்தினைப் பெற்றுக்கொண்டவர்களின் தகவல்கள் உட்பட) ஒரு பொது இணையத்தளத்தில் அப்டேட் செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடப்படுகின்றது. ஏனென்றால், மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் இலங்கையில் இடம்பெற்ற மாபெரும் அபிவிருத்தித் திட்டங்களையும், அதிலே இடம்பெற்ற ஊழல் மோசடியையும், அந்த அபிவிருத்தித் திட்டங்கள் இலங்கை மக்களுக்கு ஏற்படுத்திய சுமையினையும் நாங்கள் இன்று அனுபவித்துக்கொண்டு இருக்கின்றோம். அந்த மெகா அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் இலங்கையின் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு எந்தவகையிலும் பங்களிப்பு செய்யவில்லை. மாறாக கடன் சுமையினையே மாத்திரமே ஏற்படுத்தியது என்பதை நாங்கள் மறந்துவிடக்கூடாது. அதற்கு மத்தள விமான நிலையம், ஹம்பாந்தோட்டையில் கட்டப்பட்ட மாநாட்டு மண்டபம், சூரியவெவ என்ற இடத்தில் கட்டப்பட்டுள்ள சர்வதேச விளையாட்டு மைதானம் மற்றும் தாமரைத்தடாகக் கட்டடம் என்பவற்றினை சிறந்த உதாரணங்களாகக் குறிப்பிடலாம். ஆனால், இந்தத் திட்டங்களை முன்னெடுத்த அரசியல்வாதிகளுக்கு அவை செல்வத்தை பெருக்கிக் கொள்ள உதவியாக இருந்தன என்பதில் ஐயமில்லை.

**வரி விலக்கு தொடர்பான தகவல்களை பொது மக்களுக்கு வழங்குதல்**

மேலும், முதலீட்டு சபை மற்றும் தந்திரோபாய அபிவிருத்தித் திட்டங்கள் ஊடாக வரி விதிவிலக்கினை பெறும் நிறுவனங்கள், வரி விலக்களிப்பட்ட மொத்த தொகை மற்றும் சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு வரி சலுகை வழங்கப்பட்ட நிறுவனங்களின் விபரங்கள் அனைத்தினையும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை இணையத்தளத்தில் அப்டேட் செய்ய வேண்டும் என இவ்வறிக்கை குறிப்பிடுகின்றது. இதன் மூலம் வரி விலக்கு அளிக்கப்படும் நிறுவனங்கள் அதன் பெறுமதி

(மறு பக்கம் பார்க்க)

தொடர்பான தகவல்களை பொது மக்கள் பெற்றுக் கொள்ள முடியும் - அதன் ஊடாக விலைமனு மற்றும் வரி விலக்கு விடயங்களில் வெளிப்படைத்தன்மையினை ஏற்படுத்த முடியும். இன்று அரசியல்வாதிகள் அல்லது அமைச்சர்கள் தமக்கு வேண்டப்பட்ட நிறுவனங்களுக்கு அல்லது நன்பர்களின் நிறுவனங்களுக்கு வரி விலக்கு வழங்கும் நடைமுறையே காணப்படுகின்றது. அதில் எந்த ஒரு வெளிப்படைத்தன்மையும் பின்பற்றப்படுவதில்லை. தேர்தல் காலத்தில் பிரசாரச் செலவுகளுக்கு நிதி வழங்கும் நிறுவனங்களுக்கு இவ்வாறு வரி விலக்கினை வழங்குவது ஊழல் மோசடிகள் நிறைந்த தேல்தல் அரசியலின் ஒரு நிரந்தர அம்சமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

**அரசுக்குச் சொந்தமான வியாபார நிறுவனங்களை மறுசீரமைத்தல்**

அரசாங்கத்திற்குச் சொந்தமான பொது நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கான கொள்கை ஒன்றை அரசாங்கம் கொண்டு வர வேண்டும் என்பது ஒன்பதாவது பரிந்துரையாகும். அரசுக்குச் சொந்தமான பொது நிறுவனங்களில் பாரிய நட்டம், ஊழல் மற்றம் மோசடிகள் மலிந்து காணப்படுகின்றன. அவை மறுசீரமைக்க வேண்டிய தேவை மிகவும் அவசரமாகவே காணப்படுகிறது. அவை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு எந்த வகையிலும் பங்களிப்பு செய்வதில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ந்தும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. அவை பாரிய சுமையாக மாறியுள்ளது என சிலர் விமர்சிக்கின்றனர். அரசுக்குச் சொந்தமாக 527 பொது நிறுவனங்கள் காணப்படுகின்றன. அவற்றில் சுமார் 55 நிறுவனங்கள் மாத்திரமே வருடாந்த அறிக்கையினை வெளியிடுகின்றன. இந்நிறுவனங்கள் மாத்திரமே ஓரளவுக்கு வினைத்திறனாகக் காணப்படுகின்றன. அதில் 10 விகிதமான நிறுவனங்களுக்கு மாத்திரமே நிதி தொடர்பான தகவல்கள் உள்ளன. 2006 - 2017 காலப்பகுதியில் இந்நிறுவனங்கள் சுமார் 795 பில்லியன் நட்டத்தினை ஏற்படுத்தியதாக கொழும்பில் அமைந்துள்ள எட்வகாட்டா நிறுவனம் 2019ஆம் ஆண்டு அரசுக்குச் சொந்தமான வியாபார நிறுவனங்கள் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. ஆகவே, அவை தொடர்ந்தும் நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களாக இருப்பதனால், அவற்றினை மறுசீரமைத்து வினைத்திறன் மற்றும் விளைத்திறனை அதிகரிக்க வேண்டிய பெரிய தேவை காணப்படுகிறது. இந்நிறுவனங்களுக்கு நியமிக்கப்படும் ஆலோசனை சபை மற்றும் உத்தியோகத்தர்கள் திறமை, தகுதி கொண்டவர்களாகவும், ஒழுக்கம் மற்றும் சுயாதீனமாக செயற்பட கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் எனவும் ஐஎம்எவ் அறிக்கை குறிப்பிடுகின்றது.

**தந்திரோபாய அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்துதல்**

இலங்கை அரசாங்கம் கடந்தகாலங்களில் தொடர்ச்சியாக தந்திரோபாய அபிவிருத்தி செயற்திட்டங்கள் என்ற பெயரில் மேற்கொண்ட பல பாரிய செயற்திட்டங்களை நாம் அவதானித்துள்ளோம். சர்வதேச நாணய நிதியம் இத்தகைய தந்திரோபாய அபிவிருத்தி செயற்திட்டங்கள் எதனையும் இனி மேற்கொள்ள முடியாது, அத்தகைய சட்டங்கள் இரத்து செய்யப்பட வேண்டும் அல்லது இல்லாமல் ஒழிக்கப்பட வேண்டும் என்பதனையே பத்தாவது பரிந்துரையாக முன்வைத்துள்ளது. ஏனென்றால், அத்திட்டங்களில்தான் ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் மாபெரும் ஊழல் மோசடிகள் இடம்பெற்றன. அரசியல்வாதிகளும், ஒப்பந்தக்காரர்களும் பெரும் இலாபத்தை ஈட்டுகின்ற திட்டங்களாக அவை காணப்பட்டன. இலங்கையில் அப்படியான அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒரு வெளிப்படையான செயன்முறை, அத்திட்டங்களை மதிப்பீடு செய்வதற்கான வினைத்திறன் மிக்க பொறிமுறை என்பன உருவாக்கப்படும் வரைக்கும் அவை கைவிட வேண்டும் என வலியுறுத்துகின்றது.

இது தொடர்பாக அண்மைக்காலங்களில் நாடாளுமன்றத்தில் உள்ள பொது நிதி தொடர்பான குழுவிலும் தொடர்ந்தும் பேசப்படுகின்றது. பொது நிதி தொடர்பான குழுக்கூட்டங்களில் கூட இத்திட்டங்களின் ஊடாக அரசாங்கம் சில கம்பனிகளுக்குத் தொடர்ச்சியாக வரி விலக்கை வழங்கிய விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. சில கம்பனிகளுக்கு 17 ஆண்டுகள் வரைக்கும் அரசாங்கம் வரி விலக்கை வழங்கியுள்ளது என்பது குறிப்பிடதக்கதாகும். இவை அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய கோடிக்கணக்கான ரூபாய் வருமானத்தினை இல்லாது செய்துள்ளது. அந்த வரி விலக்கு ஊடாக யார் நன்மை அடைந்தார்கள் என்றால் குறிப்பிட்ட சில அரசியல்வாதிகளும் வியாபாரிகளுமே ஆகும். அத்தகைய பொறுப்பற்ற செயற்பாடுகளே இன்று பொருட்களின் விலை அதிகரிப்பு, வரி அதிகரிப்பு என பொதுமக்களுக்கு பாரிய சுமையை ஏற்படுத்தியுள்ளது. மறுபுறமாக நாட்டினை வங்குரோத்து நிலைக்கும் தள்ளியுள்ளது என்பதில் ஐயமில்லை. ஆகவே, அத்தகைய பாரியத் திட்டங்கள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்பதை சர்வதேச நாணய நிதியம் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்றது.

**வரிச்சட்டத்தினை திருத்துதல்**

இவ்வறிக்கை வலியுறுத்துகின்ற இன்னுமொரு பரிந்துரை யாதெனில் வரி தொடர்பான சட்டத்தை சீர்திருத்த வேண்டும் என்பதாகும். நாடாளுமன்றத்தின் அனுமதி இல்லாமல் அரசியல்வாதிகள் அல்லது அமைச்சர்கள் வரி அறவிடும் செயன்முறையை இல்லாது செய்ய வேண்டும் அல்லது கட்டுப்படுத்த வேண்டும் என்பது பதினோராவது பரிந்துரையாகும். கடந்த காலங்களில் சில அமைச்சர்கள் நாடாளுமன்றத்தின் அனுமதி இல்லாமல் சில பொருட்களுக்கு வரித் தீர்வை வழங்கினார்கள். சீனியில் ஏற்பட்ட மோசடி இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். ஆகவே, இவற்றை நிறுத்த வேண்டுமானால் நாடாளுமன்றத்தின் அனுமதியுடன் மாத்திரமே வரி திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்பதை இவ்வறிக்கை பரிந்துரைக்கின்றது. பொது நிதி தொடர்பான அனைத்து அதிகாரங்களும் நாடாளுமன்றத்துக்கு இருப்பதனால் வரி தொடர்பான விடயங்களில் மாற்றங்கள் செய்யும் போதும் நாடாளுமன்றத்தின் அனுமதி அவசியம் என்பது இதன் மூலம் வெளிப்படுகின்றது.

**குறுங்கால ஊழல் ஒழிப்பு செயற்பாடுகளை முன்னெடுத்தல்**

பன்னிரெண்டாவது பரிந்துரை குறுங்கால ஊழல் ஒழிப்பு செயற்பாடுகளை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதாகும். ஊழல் எதிர்ப்பு வேலைத்திட்டங்கள் அரசாங்கத்துக்கு வருமானத்தினைப் பெற்றுத்தரும் சகல திணைக்களங்களிலும் இடம்பெற வேண்டும் - அதன் ஊடாக உள்ளக மேற்பார்வை, குற்றவியல் புலனாய்வு மற்றும் சட்ட அமுலாக்கம் என்பவற்றினை ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டும. இதற்கான காலக்கெடு 2023 டிசம்பர் மாதம் ஆகும். சுங்க திணைக்களம், மதுவரி மற்றும் உள்நாட்டு இறைவரித்திணைக்களம் என்பவற்றில் இடம்பெறும் ஊழல் மோசடிகளை ஒழிப்பதை நோக்காகக் கொண்டு இப்பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது. 2024 டிசம்பர் மாதம் ஆகும்போது இச்செயற்பாட்டினால் ஏற்பட்ட பெறுபேறுகள் என்ன என்பது தொடர்பாக பொது அறிக்கையொன்றினை நிதி அமைச்சு வெளியிட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது.

**ஊழியர் சேமலாப நிதியினைப் பாதுகாத்தல்**

பதின்மூன்றாவது பரிந்துரை மத்திய வங்கியின் முகாமைத்துவத்தில் இருந்து ஊழியர் சேமலாப நிதியை விடுவிப்பதற்கு அவசியமான புதிய முகாமைத்துவ நடைமுறைகளை அடையாளம் காண்பதற்காக பரந்த கலந்துரையாடலின் பின்னர் 2024 ஜூன் மாதம் ஆகும் போது அமைச்சரவை பத்திரம் ஒன்றினை தயாரிக்க வேண்டும் என்பதாகும். அதனூடாக முரண்பட்ட நலன்களை தவிர்க்க வேண்டும் என்கிறது. இப்பொழுது ஊழியர் சேமலாப நிதி தொடர்பான முழு அதிகாரத்தையும் மத்திய வங்கிதான் கொண்டிருக்கிறது. மத்திய வங்கி பொதுமக்களின் அனுமதி மற்றும் ஆலோசனை இல்லாமல் இந்த நிதியைப பயன்படுத்துவதை நாங்கள் இன்று பார்க்கின்றோம். உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு என்ற பெயரில் அதன் மீதுதான் தற்போதைய அரசாங்கம் கைவைத்துள்ளது. அதனூடாக தொழிலாளர்கள் கஷ்டப்பட்டு வாழ்நாள் முழுவதும் சேமித்த பணத்திற்கு பெரும் ஆபத்து மற்றும் ஒரு பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவேதான் அந்த நிதியை கையாள்வதற்கு பிரத்தியேக நிறுவன கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதனை ஐஎம்எவ் வலியுறுத்துகின்றது. இன்று ஊழியர்

(மிகுதி நாளை தொடரும்...)





